# தெளக்கு

இந்தச்சுடருக்கு—

★ தே. ஜெயராமன்

★ செ. செல்வராசா

★ எஸ். சுப்பிரமணியம்

★ சு. லோகதாசன்

★ அருளீஸ்வரி வேதநாயகம்

★ அ. வி. மயில்வாகனம்

★ இ. நடராசா

★ சு. சுபத்திரா

—ஒளியூட்டுகின்றனர்

நவம்பர் - 1993

# விளக்கு

**வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்**

அகல்: 01 | ஸ்ரீமுக ஐப்பசி ★ திருவள்ளுவர் ஆண்டு : 2024 ★ அக்டோபர் 1993 | சுடர்: 02

## உடனடித்தேவை

ஆசிரியராகக் கல்விச் சேவையிற் சேரும் ஒருவர் தன் அறிவு, அனுபவம், ஆற்றல், அர்ப்பணிப்பு மனப்பான்மை போன்றவற்றின் செழுமையான விருத்தியின் அடிப்படையிற் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுக் கல்வி நிர்வாகத்தில் அதியுயர் பதவியை அடைவதற்கு இப்போது வாய்ப்பு உள்ளது.

பள்ளி மாணவராக, பட்டதாரி மாணவராக, பயிற்சி ஆசிரிய மாணவராக, ஆசிரியராக பல்வேறு நிலைகளிலிருந்து கல்வியைக் கற்றும், கற்பித்தும் கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நேரடியான பங்கை ஏற்றும், காலத்திற்குக்காலம் எழுகின்ற கல்விப் பிரச்சனைகள் பற்றிச் சிந்தித்தும் அவற்றின் தீர்வுக்கு உதவியும் வருகின்றவர்களே, கல்வி நிர்வாகப்பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும்; கல்வித்திட்டமிடல், மேற்பார்வை, வளப்பங்கீடு முதலியவற்றை இவர்களாலேயே சரியான முறையில், உச்சப்பயன் தரும் வகையிற் செய்யமுடியும்.

இந்த வகையில், கல்வி நிர்வாக சேவைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது பொருத்தமானதும் நியாயமானதும் மட்டுமல்லாமல், இன்றியமையாததுமாகும்.

கற்பித்தல் என்ற ஒரே வேலையையே மீண்டும் மீண்டும் செய்வதில் அலுத்துக்களைத்துப் போனவர்கள், சற்று வேறுபட்ட கல்விக்கடமைகளில் ஈடுபட விரும்புவது இயற்கையே. பாடசாலை அதிபராகவோ, கல்வி அதிகாரியாகவோ, பதவி உயர்வு பெறும் வாய்ப்புக்கள் இத்தகையோர்க்கு இருப்பது வரவேற்பிற்குரியதே.

ஆனால், ஆழ்ந்த அறிவும், பழுத்த அனுபவமும் பன்முகப்பட்ட ஆற்றலுமிருந்தும் பதவி உயர்வுகளை நாடாமற் தொடர்ந்தும் ஆசிரியர்களாகவே சேவையாற்ற மனப்பூர்வமாக விரும்புகின்றவர்களின் நிலை என்ன?

வருடாந்தச் சம்பள ஏற்றத்தைவிட, வேறு ஏதாவது பொருளாதார ஊக்குவிப்போ, உயர்அந்தஸ்தோ இவர்களுக்கு உண்டா?

''இல்லை'' என்ற பதில் மனவருத்தத்தைத் தருகின்றது

இந்த ''இல்லாமை''க்கு முற்றுப்புள்ளி இடவேண்டியது உடனடித்தேவையாகும்.

கல்வி நிர்வாகத்தில் அதியுயர் பதவியில் இருந்து ஒருவர் பெறும் சம்பளத்தை, ஆசிரியராக இருந்து கொண்டே பெறக்கூடிய வகையிற் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

பல்லாற்றானும் சிறந்தவர்களை ஆசிரியர் சேவைக்கு ஈர்ப்பதற்கும், தொடர்ந்து அதில் அவர்களை நிலைபெறச் செய்வதற்கும் வழிவகுக்கப்படவேண்டும்.

அந்த நிலையிலேதான் ஆசிரிய வாண்மை ஓங்கும்; மாநிலம் சிறக்கும்.

# மணி விழாக்கள்.

ஆசிரியர்களைப் பெருமையுடன் தலைநிமிரச் செய்த அண்மைக்கால விழாக்களுள் மூன்று விழாக்கள் மணியாக ஒளி வீசின.

தெல்லிப்பளை கலை இலக்கியக் களத்தினர், தாவடி இ. த க. பாடசாலை அதிபர் திரு. அநு. வை. நாகராஜன் அவர்களின் மணி விழாவை இணுவிலில் நடத்தினர். அதிபர், எழுத்தாளர், நூலாசிரியர், பொதுப்பணியாளர் முதலிய நிலைகளில் இலக்கிய வித்தகரும், சைவப்புலவருமான நாகராஜன் ஆற்றிவரும் சேவைகள் பலராற் பாராட்டப்பட்டன.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உடற்பயிற்சி ஆசானாக இருந்து, தன் மாணவ அணியினரை வட்டார, மாவட்ட, தேசிய மட்டங்களில் முதலிடம் பெறச் செய்து யாழ் தமிழ் மாணவர்களுக்கு அகில இலங்கைப் புகழீட்டிக் கொடுத்த திரு. அ. தம்பித்துரை அவர்களின் மணி விழாவைத் திரு. க. வை. தனேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மல்லாகத்திற் கொண்டாடினர். எளிமை, தூய்மை, நேர்மை முதலிய குணங்களை மாணவரிடத்தே வளர்த்த அவருடைய பண்பு, பலரின் பாராட்டிற்குள்ளானது.

தமிழாசிரியர் சங்கப் பிரமுகரும் இணுவில் அ. மி. த. க. பாடசாலை அதிபராயிருந்தவருமான திரு செ.சோதிப் பெருமாள் அவர்களின் மணி விழா ஆசிரியர் திரு. பஞ்சாட்சரம் தலைமையில் இணுவிலில் நடைபெற்றது. அதிபராக அவர் ஆற்றிய சேவையையும், மருதனார்மடக் கல்விக் கோட்டப் போட்டிகள், பொருட்காட்சிகள், பரீட்சைகள் போன்றவற்றின் பொறுப்பாளர்களுள் ஒருவராக இருந்து ஆற்றிய பயன்மிகு சேவைகளையும் பலரும் பாராட்டிப் பேசினர்.

சாதாரண பொதுமக்கள் மட்டுமல்லாமற் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலதரப்பட்டோர் இவ் விழாக்களுக்குச் சமுகமளித்தனர். தனித்தனியாக வெளியிடப்பட்ட மணிவிழா மலர்கள் இவர்களின் பண்பு, பன்முகப் பணி, சாதனை போன்றவற்றைத் துலாம்பரமாக்குகின்றன.

மணி விழா நாயகர்களை வாழ்த்துகிறோம்; 'சமுதாயம், ஆசிரியர்களை மதிப்பதில்லை' என்ற கூற்றைப் பொய்யாக்கும் வகையில் விழாவெடுத்தவர்களையும், விழாவிற் கலந்து கொண்டவர்களையும் பாராட்டுகின்றோம்.

# ஒய்வு பெறும் அதிபர்கள்

நாவாந்துறை றோ. க. வித்தியாலய அதிபர் திரு. சு. மலக்கியாஸ், யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருவாட்டி திவ்யசிரோமணி நாகராசா ஆகியோர் தம் சேவையிலிருந்து ஒய்வுபெற்றுள்ளனர்.

ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், உதவி அதிபராகவும் நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்ட திரு. மலக்கியாஸ், தன் சேவைக் காலத்தின் இறுதி நான்காண்டுகளில் அதன் அதிபராகப் பணியாற்றினார், வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அவ்வித்தியாலயம் கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும்கணிசமான வளர்ச்சியடைய இவர் வழி வகுத்தார். அகதி மாணவர் பலரை ஆதரித்தும். மேலதிக இடவசதிகள் ஏற்படுத்தியும். மாலை நேர வகுப்புக்கள் நடத்தியும் இவர் ஆற்றிய சேவை குறிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத்திலே சைவ மாணவிகளுக்கென உருவாக்கப்பட்ட கல்லூரிகளுள் முன்னணியில் நிற்பது யாழ் இந்து மகளிர் கல்லூரி. நிறுவனர்களின் இலட்சியத்தை நினைவிற் கொண்டு கல்லூரியை உயர் நிலைக்கு இட்டுச் சென்றவர் அதிபர் செல்வி ப. இராமநாதன். முதலிற் பகுதித் தலைவராகவும் பின்னர் பிரதி அதிபராகவுமிருந்த திருவாட்டி தி. நாகராசா 1986 ல் அதன் அதிபராகி இக் கல்லூரி மேலும் வளர்ச்சியுறக் காலாகவிருந்தார். பொதுப் பரீட்சைகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் மாணவிகள் பலர் சாதனை படைத்தனர். பொன்விழாக் கால அதிபரான இவரின் ஆர்வமும் முயற்சியும், கல்விக் கண்காட்சி, கலைவிழா, பொன்விழா, மலர் வெளியீடு முதலியவை சிறப்பாக அமையக் காரணமாக இருந்தன.

இவர்களின் ஒய்வுக்காலம் வளமுடன் நிறைய வாழ்த்துகின்றோம்.

## ஏழைமை

''அவனுடைய கல்வி முன்னேற்றத்திற்கு அவனுடைய ஏழ்மை தடையாக இருந்தது'' எனச் சிலர் எழுதுகின்றனர். வறுமை, - பொருளின்மை என்பதை ''ஏழ்மை'' குறிக்காது. ''ஏழைமை'' என்பதே சரியான சொல்லாகும்.

# விளக்கு-அறிமுகம்: ஆறு :: முகம்

''வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்'' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டமைந்த ''விளக்கு'' ஆசிரிய சமூகத்தின் எழுச்சியை உயர்ச்சியைக் கருவாகக் கொண்ட தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடு. தன்னை விளக்கமுறச் செய்து தன்னைச் சூழவுள்ள இடத்தையும் விளக்கமுறச் செய்வது ''விளக்கு''. தன் மாணவரின் அறியாமை இருளையகற்றி அறிவுச் சுடரை ஏற்றும் விளக்கு ஆசிரியன்.

கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறள் அட்டையிலுள்ள கரும்பலகையில் இடம் பெறுகின்றது. முதற் பார்வையில்,கற்கும் மாணவர்க்கு மட்டும் இக்குறள் உரியதெனத் தோன்றும்; ஆழ்ந்து சிந்திக்கையில். கற்பிக்கும் ஆசிரியர்க்கும் இது உரியதென்பது தெளிவாகும். ஆசிரியர் கசடறக் கற்பித்தாற்றானே மாணவரும் கசடறக் கற்க முடியும் என்பது சரியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் ஒவ்வொருவரும் கசடறக் கற்க வேண்டும்; கசடறக் கற்பிக்க வேண்டும்; ஆசிரிய வாண்மை ஓங்கும்; மாநிலம் சிறக்க வழிபிறக்கும். அதற்கு ''விளக்கு'' ஒளி தரும்.

**ஆர். கே. தர்மராசா**
சாவகச்சேரி

''பாடசாலை அதிபர்கள் ஒரு சிந்தனை'' (அ. பஞ்சலிங்கம்) ''நுண்ணறிவு ஈவும் ஆக்கத்திறன் ஈவும்'' ஆகிய கட்டுரைகளின் உள்ளடக்கம் காத்திரமாயுள்ளது; அவை எழுதப்பட்ட முறையில் எளிமையும் அழகும் இருக்கின்றன. ''நேருக்கு நேர்'' பகுதியில் திரு. ஆ. இராமசாமி கொடுத்துள்ள பதில்களில் ''ஒரு நல்ல அதிபர், பாடசாலையில் நன்மைகள் வந்து சேரும் போது அவற்றினைச் சரிவரப் பங்கிடுபவராயும் பிழைகள் வந்துற்றபோது அவற்றின் முழுப் பொறுப்பையும்தானே ஏற்பவராயும் இருத்தல் வேண்டும்'' என்பது மிகப் பயனுள்ள கருத்து. யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், தன்னை நல்வழிப் படுத்திய ஆசிரியரைப் பற்றி நன்றியுடன் எழுதிய ''ஏணிப் படிகள்'' பகுதி தொடர வேண்டும். இடம் நிரப்பிகளும் நல்ல முறையில் அமைந்துள்ளன. விளக்கு வாசகன் விரும்புவதை எழுதவில்லை, அவன் விரும்ப வேண்டியதை எழுதியுள்ளது ''சாந்துணையும் கற்கும் பேரவா, வேறு யாரிடம் இல்லாவிட்டாலும், ஆசிரியரிடம் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த அவாவை ''விளக்கு'' நிச்சயமாய் நிறைவேற்றும்.

**கோகிலா. மகேந்திரன்**
பண்டத்தரிப்பு

தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்துரை இந்நாட்டிலுள்ள கல்விமான்களின் தலையாய கடமைகள் யாவை என்பதைத் துல்லியமாகவும் ஆணித்தரமாகவும் கோடிட்டுக் காட்டுகின்றது. வளர்முக நாடுகளின் கல்விக் கொள்கையில் மாற்றம் வேண்டும் எனத் தர்க்கரீதியாகக் குறிப்பிடும் ஆர். எஸ். நடராசா அம்மாற்றத்தை ஆசிரியர்கள் கொண்டுவரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறார். கலாநிதி சபா. ஜெயராசாவின் கல்வி முகாமைத்துவச் செல்நெறிகள் என்ற கனதியான கட்டுரை, உயர்புலக் கல்வியை நாடி நிற்கும் ஆசிரியனுக்கு, குறிப்பாக இத்துறைசார் அறிவுத் தேடல் செய்பவனுக்கு, அறிமுகக் கட்டுரையாக அமைந்துள்ளது. டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தியின் ''சாதனைக்கு ஒரு பாதை', ஆசிரியர்கள் மட்டுமல்லாமற் சகலரும் அறிய வேண்டிய கருத்துக்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. நாள்கள், நாலுபக்கம், சாத்தன், திருவாளர் திருவாட்டி போன்ற துணுக்குகள் நம்மை நாமே திருத்திக் கொள்ளத்தக்க குறிப்புக்களாக இருக்கின்றன. ''விளக்கு'' காலத்தின் தேவை கருதி வந்த ஒளிக்கீற்று இக்கீற்றிலிருந்து பல்கோடிக் கீற்றுக்கள் பிறக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

**அநு. வை. நாகராஜன்**
மருதனார்மடம்

''சட்டம் ஓர் இருட்டறை'' (கோ. சி. வேலாயுதம்) க. பொ. த. ப. (சா. த) வகுப்பிற்கு அனுமதி கோரிய 20 வயது மாணவி பற்றிக் கூறுகிறது. எல்லா அதிபர்களும் அனுமதி மறுத்த நிலையில், மனிதாபிமான அடிப்படையில், தற்றுணிபுடன் அனுமதி வழங்கி, பின்னர் பல்கலைக்கழகத்தில் அவள் சிறப்புப் பட்டதாரியாகும் வாய்ப்பை அளித்த ஓர் அதிபரின் அனுபவ முத்திரை. ''நுண்ணறிவு ஈவும் ஆக்கத்திறன் ஈவும்'' (க. சொக்கலிங்கம்) ஆசிரியர், பெற்றோர் பலரின் கண்ணைத் திறக்கவல்லது. எமது கல்வி-பரீட்சை முறை, பாடநூல்களில் உள்ளவற்றை அச்சொட்டாக ஒப்பிக்கும் மாணவர்களைக் கொண்டாடுவதாக உள்ளது. படைப்பாற்றல் உள்ள பிள்ளையை நாம் ஊக்குவிப்பதில்லை. நுண்ணறிவு குறைந்தவரிடத்தும், படைப்பாற்றல் விளங்கக் காணலாம் என்ற உண்மையை ஆசிரியர் தக்க ஆதாரங்களோடு நிறுவியுள்ளார். பிள்ளைகளுடைய நாட்டங்களைக் கருத்திற் கொள்ளாது தம்முடைய ஆசைகளையும் நிராசைகளையும் அவர்கள்மேல் ஏற்றும் பெற்றோரே பெரும்பான்மையினர் என்ற உண்மை நெஞ்சிற் கனக்கிறது.

**சோ. பத்மநாதன்**
யாழ்ப்பாணம்.



ஆசிரியம் என்பது உயிரோட்டமுள்ள ஒரு சமுதாயத்துடன் உறவாடுகின்ற தொழில். எனவேதான் பாடசாலையை ''புதுமைகாண்-உயுர்ப்புள்ள தொகுதி'' என்று சொல்வார்கள். காலத்துக்குக் காலம் நிகழும் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து மேன் மேலும் சிந்தனை வளர்ச்சியைத் தூண்டுபவர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டுமெனில், அவர்கள் தொடர்ந்து அறிவைத் தேடுபவர்களாகவும் புதுமைகளைக் காண விழைபவர்களாகவும் இருக்கவேண்டும். காலத்திற்கேற்ப மாறி வரும் கல்விப் பொருளிலும் கல்வி வழங்கு முறையிலும் பயிற்சி பெறவேண்டியது அவசியம். ஆசிரியப் பயிற்சி முறைகள் நன்கு விரிவுபடாத இக்கால கட்டத்தில் ஆசிரிய வாண்மை விருத்திக்கு உதவும் வகையிற் சஞ்சிகை ஒன்று வெளிவர வேண்டியதன் அவசியம் இன்று உணரப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது. ''விளக்கு'' சஞ்சிகை நல்ல முறையில் வளர்த்தெடுக்கப்படின், ஆசிரிய வாண்மை விருத்திக்குச் சிறப்பான பங்களிப்பைச் செய்ய முடியும். ஆசிரியர்கள், அதிபர்கள் கல்வி நிருவாகிகள், கல்வியிலாளர்கள் போன்ற கல்வித்துறைசார் அனைத்து ஆளணியினரதும் இணைவு, இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

**த. கலாமணி**
வடமராட்சி.

''விளக்கு'' சஞ்சிகை காலத்தின் தேவை ஒன்றினை நிறைவு செய்கிறது. ஈழத்துத் தமிழ் மக்கள், கல்வியையே உயிராகப் போற்றுபவர்கள், இந்த உயிரின் நலத்திலும் தீங்கிலும் கல்வி நிறுவனங்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் பெறும் இடம் முக்கியமானது. இவர்களுக்குப் பல வகையிலும் பயன் தருவதோடு இவர்களின் இதயக் குரலாகவும் விளங்குவதே ''விளக்கு'' என்பதற்கு அதன் முதல் இதழிலேயே அறிகுறிகள் காணப்படுவது மகிழ்ச்சி தருவதாகும். ''வித்தியா போதினி'' ''கல்வி'' முதலான கல்விசார் சஞ்சிகைகள் முன்பு வெளியாயிருந்த போதிலும் ஆசிரியத் தொழிலை முதன்மைப் படுத்தும் முதற் சஞ்சிகை என்ற பெருமைக்கும் ''விளக்கு'' உரிமை கொண்டாடினால் அது முற்றிலும் நியாயமானதே. பெரும்பாலான கட்டுரைகள் பொருட்பொருத்தமும் பயன்பாடும் மிக்கவை. ''விளக்கு'' சுடர் விட்டு மேலும் பிரகாசித்துத் தமிழீழக் கல்வியுலகிற்கு நல்வழி காட்டும் என்பதற்கை யமில்லை.

**சொக்கன்**
வேலணை.

## நான் விரும்பும் ஆசிரியர்

**மாணவர்களே!**

உங்கள் ஆசிரியர் எப்படியானவராக இருக்க வேண்டும்?

**ஆசிரியர்களே!**

எத்தகையவராக நீங்கள் இருக்க விரும்புகிறீர்கள்?

**அதிபர்களே!**

உங்கள் பாடசாலையிற் கடமையாற்றும் ஆசிரியர்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பவை எவை?

**பெற்றோர்களே!**

எப்படியான ஆசிரியர் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்?

உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியனுப்புங்கள். புல்ஸ்காப் தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதுக. சிறந்த கட்டுரைகளுக்குச் சன்மானமுண்டு. முடிவுத் திகதி 31-12-1993.

## வர்த்தகக் கற்கைநெறி வழிகாட்டி

*க. பொ. த.ப. உயர்தர வகுப்பில் வர்த்தகப்பாடங்களைப்படிப்பவர்களுக்குரிய உயர்கல்வி வாய்ப்புக்கள் தொழில் வாய்ப்புக்கள் பற்றி விளக்குகின்றார் யாழ். பல்கலைக் கழக வர்த்தகத் துறை விரிவுரையாளர். இத்துறையில் நாட்டமுடையோர், தம் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கும், தாம் விரும்பும் தொழிலுக்குத் தம்மைத் தயார் செய்யவும் இக் கட்டுரை வழிகாட்டும்.*

**தே. ஜெயராமன் B. Com (Hons); M. B. A.**

இன்று வளர்ந்து வரும் துறைகளில் முகாமைத்துவ, வர்த்தகக் கற்கைநெறி மிகமுக்கியமான இடத்தைக் கொண்டுள்ளது. இலங்கைக்கு மட்டுமல்லாமல் அபிவிருத்தி அடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா கனடா, வுஸ்திரேலியா இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் இக்கூற்றுப் பொருந்தும் இலங்கையில் 1980 களின் பின்பு வர்த்தக, முகாமைத்துவத் துறையானது மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. பெரும்பாலான பாடசாலைகளிற் க. பொ. த உயர்தர வகுப்புக்களில வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன; கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது க. பொ. த (சா. த) வகுப்புகளில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களிற் சிலர் உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞானத் துறைக்குப் பதிலாக இத்துறையினை விரும்பித் தெரிவு செய்வதனை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழக, அனுமதியினைப் பொறுத்தும் இக்கற்கைநெறியானது மிகவும் போட்டி மிக்க துறையாக இருப்பதைவெட்டுப்புள்ளிகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த வருட வெட்டுப்புள்ளிகளை நோக்கும் போது மருத்துவம், பொறியியல், விவசாயம், மிருகவைத்தியம், பல்வைத்தியம், சட்டம், கட்டிடக் கலை, உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் போன்ற துறைகளைக் காட்டிலும் முகாமைத்துவக் கற்கை நெறிக்குக் கூடுதலான புள்ளிகள் தேவைப்பட்டன. இவ்வாறு போட்டி மிக்கதுறையாக இத்துறை வளர்ந்து வருவதற்குப் பிரதான காரணங்களாகப் பின் வருவனவற்றினைக் குறிப்பிடமுடியும்.

(i) பல்கலைக்கழக அனுமதியினைப் பெறுவோர்களும், அனுமதியினைப் பெறாதவர்களும் இத்துறையில் தமது உயர்கல்வியினைத் (Higher Studies) தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

(ii) க. பொ. த உயர்தர வகுப்புக்களில் வர்த்தகக் கல்வியினைப்பயிலும் மாணவர்களுக்கு இதனைத் தொடர்ந்து தொழில்சார் கற்கை நெறிகளைப் பயில்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

(iii) வர்த்தகக் கற்கை நெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வசதிகள் அதிகம். முக்கியமாக தனியார் துறைகளிற் காணப்படும் கணிசமான அளவு வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமானவர்கள் வர்த்தக முகாமைத்துவக் கற்கைநெறியினைப் பயிலும் மாணவர்கள் என்பது மறுப்பதற்கில்லை.

இத்துறையிற் காணப்படும் உயர்கல்வி வாய்ப்புக்கள் எவை? வேலைவாய்ப்புக்கள் எவை? அவற்றைப் பெற்றுக் கொள்வதாயின் எத்தகைய கல்வித்தகைமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்? ஆகிய வினாக்களுக்கான விடைகளை மாணவர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியம். இதன் மூலம் மாணவர்கள் தமது எதிர்காலத்தினைத் திட்டமிடவும், தாங்கள் விரும்பிய ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தமது உயர்கல்வியினைத் திட்டமிடவும் முடிகின்றது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் இது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு ஆலோசகர்கள் காணப்படுவர். இவர்கள் " Carrier Advisor " அல்லது "Carrier Counseller என அழைக்கப்படுவர்

க. பொ. த (உ . த) மாணவர் ஒருவர், பயிலும் நான்கு பாடங்களில் பொருளியல், வர்த்தகமும் நிதியும், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களை உள்ளடக்கியிருப்பின் அவர் வர்த்தகத் துறையினைச் சேர்ந்த மாணவனாக அடையாளம் காணப்படுவார்.

பொதுவாக உயர்தரவகுப்பில் வர்த்தகத் துறையினைத் தெரிவு செய்யும்போது, அம்மாணவனுக்கு மூன்று தகைமைகள் இருப்பது விரும்பத்தக்கது.

(i) இத்துறையில் விருப்பத்தினைக் கொண்டு இருத்தல். விருப்பம் இருந்தாற்றான், கற்பதற்கும் முன்னேறுவதற்கும் ஊக்கம் ஏற்படும்.

(ii) ஆங்கில அறிவும், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவதற்கான ஒரு விருப்பமும் இருத்தல்: வர்த்தகத்துறை தொடர்பான உயர்கல்வியினை மேற்கொள்வதற்கு ஆங்கில அறிவுத் தேர்ச்சி மிகவும் அவசியம். வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் இது உதவியாக இருக்கும்.

(iii) கணித அறிவினைக் கொண்டிருத்தல். கணித அறிவு, ஆற்றல் இன்றி இத்துறையில் உயர்கல்வியினை மேற்கொள்வது கடினமானதாகும்.

இத்தகைமைகளையுடைய ஒருவர் வர்த்தகக் கல்வியினைப் பயில்வதற்கு மிகவும் பொருத்தமானவர் எனக் கூறலாம்.

க.பொ.த உயர்தர வகுப்பில் வர்த்தகக் கல்வியினை நிறைவேற்றும் ஒருவரின் எதிர்காலம் தொடர்பாகப் பின்வரும் வாய்ப்புக்கள் உண்டு.



(i) உயர்கல்வியினைத் தொடரல்

- பல்கலைக்கழக அனுமதி
- தொழில்நுட்பக் கல்லூரிகள்
- பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரி, திறந்த வெளிப்பல்கலைக் கழகம்
- வெளிநாட்டு பல்கலைக் கழகம்

(ii) தொழில்சார் கற்கை நெறிகளை(Professional Courses) பயிலல்.

(iii) வேலைவாய்ப்பு வசதிகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சையிற் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதியினைப் பெறும் ஒருவர் தொழில் நிர்வாகமாணி கற்கை நெறி அல்லது வணிகமாணி கற்கைநெறியினைத் தெரிவு செய்யலாம்; இவை இரண்டும் நான்கு ஆண்டுகளைக் கொண்டவை. பல்கலைக்கழக அனுமதியினைப் பெறாத ஒருவர், வெளிவாரி மாணவனாகத் தன்னைப் பதிவு செய்து பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்து பல்கலைக் கழகப் பட்டதாரியாக முடியும்; வணிகமாணி தொழில் நிர்வாக மாணிப் பட்டத்தினைப் பெற்றதனைத் தொடர்ந்து முதுமாணிக்கற்கை நெறியினைப் பயிலமுடியும். வணிக முதுமாணிக் கற்கை நெறி (Master of Commerce) கொழும்புப் பல்க்கலைக் கழகத்திலும். களனிப் பல்கலைக் கழகத்திலும் உண்டு. தொழில் நிர்வாகத்தில் முதுமாணிக் கற்கை நெறி (MB\ - Master of Business Administration) கொழும்புப் பல்கலைக்கழகத்திலும், வித்தியோதய பல்கலைக் கழகப் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்திலும்(PIM_ Postgraduate Institute of Management) உண்டு. தொழில் நிர்வாக முதுமாணிப் பட்டத்தினைப் (MBA) பெற்றுக் கொள்ளும் ஒருவர் தனியார்துறைகளில் ரூபா 25000 — ரூபா 40,000 மாதாந்த சம்பளமாகக் கொண்ட முகாமைப் பதவிகளை வகிக்க முடியும்; பலநிறுவனங்களில் முகாமைத்துவ ஆலோசகர் Management Consultant) பதவிகளை வகிக்கமுடியும்.

க.பொ.த உயர் தரவகுப்பில் சித்தி அடைபவர்கள் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களைத் தவிர வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் பட்டப் படிப்பு, பட்டப் பின் படிப்புக்களை மேற்கொள்ளலாம். புலமைப்பரிசில்களைப் பெறவும்

வாய்ப்பு உண்டு. உயர்தரப் பரீட்சையில் 300க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அவுஸ்திரேலியா நாட்டு அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. பெற்ற புள்ளிகள், ஆங்கில அறிவு என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு இவை வழங்கப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தினாலும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

அநேக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக அனுமதியினைப் பெறவும் புலமைப்பரிசில்களைப் பெறவும் க.பொ.த உயர்தரப் பரீட்சையைத் தவிர, மேலதிகமாக இரண்டு அமெரிக்கப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். முக்கியமாக அமெரிக்க, கனடா நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியினைப் பெற இப்பரீட்சைகள் அவசியம் - ஆங்கிலத்தில் தேர்ச்சியினை மதிப்பீடு செய்யும் பொருட்டு "TOEFL" (Test of English as a Foreign Language) பரீட்சைக்கும், அறிவு, திறன், ஆற்றலைப் பரீட்சிக்கும் "SAT" (Scholastic Aptitude Test) பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும். முதுமாணிக் கற்கை நெறிக்கு அனுமதிகோருபவர்கள் 'TOEFL' பரீட்சையுடன், "GMAT" (Graduate Management Admission Test" பரீட்சைக்கும் தோற்றி குறிப்பிட்டளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இது தொடர்பான தகவல்களையும், விண்ணப்பப் படிவங்களையும் கொழும்பிலுள்ள அமெரிக்க தகவற் பிரிவிற் பெறலாம்.

வணிக, முகாமைத்துவப் பட்டதாரிகள் பல்வேறுவகையான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தால், அரச, தனியார் துறைகளில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்க முடியும். இலங்கை நிர்வாக சேவைகள் பரீட்சையிற் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவைக்குள் (SLAS) பிரவேசிக்க முடியும்.

இலங்கைக் கணக்கியல் சேவைப் பரீட்சையிற் கித்தியடைவதன் மூலம் அரச திணைக்களங்களிற் கணக்காளராகப் (Accountant) பணியாற்ற முடியும். சுங்கத் திணைக்களத்தில் சுங்க அதிகாரிகளாகப் பதவி வகிக்க முடியும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி மதிப்பீட்டாளராகக் (Income Tax Assessor) கடமையாற்றலாம்.

அரச, தனியார் வங்கிகளில் முகாமைப்பயிலுனர் (Management Trainee) பதவியிற் சேர்ந்து, வங்கியாளர் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு உண்டு; சித்தியடைந்தால் வங்கிகளில் வெவ்வேறு முகாமைத்தரத்திலான பதவிகளை வகிக்க முடியும்.

இன்று வணிக முகாமைத்துவப் பட்டதாரிகள் பங்குச் சந்தைத் தரகு நிறுவனங்களிலும் மிகக் கவர்ச்சியான சம்பளத்துடன் ஆய்வாளர் பதவியையோ



முகாமைப் பதவிகளையோ பெறுவதற்கு வாய்ப்பு அதிகம். இலங்கையில் பங்குச்சந்தை வளர்ந்து வருகின்ற வேளையில், இத்துறையில் வேலைவாய்ப்புக்கள் அதிகம். இத்துறையில் ஏற்படுகின்ற வேலைவாய்ப்புகளுக்கு மிகப் பொருத்தமானவர்கள் வர்த்தகக் கல்வியினைப் பயின்றவர்களே.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தொழில் நுட்பக்கல்லூரிகள், திறந்த வெளிப்பல்கலைக்கழகம். பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் என்பனவற்றில் கணக்கியல், முகாமைத்துவம் தொடர்பான டிப்புளோமா பயிற்சி நெறிகளைக் கற்கலாம். இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து, பரீட்சையிற் சித்தியடைபவர்கள் அரச தனியார் நிறுவனங்களில் இடைநிலைக் கணக்காளர், முகாமைப் பதவிகளை வகிக்கமுடியும்.

இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனம், இங்கிலாந்திலுள்ள CIMA நிறுவனம் என்பனவற்றிற் பதிவு செய்து நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளிற் சித்தியடைந்து பட்டயக் கணக்காளராகவும் (Chartered Accountant) முகாமைக் கணக்காளராகவும் (Management Accountant) வரமுடியும். கணக்காளர்கள், தனியார் நிறுவனங்களில் மிகக் கவர்ச்சியான சம்பளத்தில், பிறநலன்களுடன் வேலை வாய்ப்புப் பெறமுடியும். அத்துடன் வெளிநாடுகளிலும் சுலபமாக வேலைவாய்ப்பினைப் பெறமுடியும்.

இங்கிலாந்திலுள்ள சந்தைப்படுத்தல் நிறுவனத்திற் பதிவு செய்து, நிறுவனத்தின் பரீட்சையிற் சித்தியடைந்து சந்தைப்படுத்தலில் டிப்புளோமா சான்றிதழைப் பெறும் ஒருவர் சுலபமாக தனியார் துறைகளில் சந்தைப்படுத்தல் பகுதியில் மிகக் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலைவாய்ப்புப் பெறமுடியும்; சந்தைப்படுத்தல் முகாமையாளர், சந்தை ஆராய்ச்சி உத்தியோகத்தர், விற்பனை முகாமையாளர், பண்டக் குறி முகாமையாளர் பதவிகளை வகிக்க முடியும். ஆரம்பசம்பளமாக ரூபா. 8000/=ற்குக் குறையாமற் பெற்றுக்கொள்ள முடியும். சுய தொழில் வேலைவாய்ப்பினையும் பெறமுடியும்.

இலங்கையிலுள்ள தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM - National Institute of Business Management) களஞ்சியப்படுத்தல், கணனி தொடர்பான பயிற்சிகள், கணக்கியற் பயிற்சிகள் போன்ற பல்வேறு குறுங்காலப் பயிற்சிகளை வழங்குகின்றது. இன்று எந்தவொரு நிறுவனத்திலும் வேலை பெறுவதற்கு, வழமையான கல்வித் தகைமைகளுடன், மேலதிகமாக, கணனி தொடர்பான அறிவும் அவசியம். எனவே கணனிப் பயிற்சி நெறி, வேலை வாய்ப்பினைப் பெறுவதற்குப் பெரிதும் உதவும் என்பதற்கையமில்லை.

இங்கிலாந்திலுள்ள IDPM (Institute of Data Processing Management ) நிறுவனத்திற் பதிவு செய்து, பரீட்சையிற் சித்தியடைந்து சான்றிதழைப் பெறுவதன் மூலம், கணனி மயப்படுத்தப் பட்ட தனியார் நிறுவனங்கள் கம்பனிகள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் என்பவற்றில், இடைநிலை முகாமைத் தரங்களில் வேலை வாய்ப்பைப் பெற முடியும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையிற் சித்தியடைந்த வணிகத் துறை மாணவர்கள், Association of Accounting Technique, Sri Lanka நிறுவனத்திற்பதிவு செய்து, நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி அடைந்து AAT என்ற தகைமையைப் பெற முடியும். இத் தகைமையைக் கொண்டு சிறிய, நடுத்தர நிறுவனங்களில் கணக்காளராகக் கடமையாற்ற முடியும். அத்துடன் இதனைத் தகைமையாகப் பெயருடன் பயன்படுத்தவும் முடியும்.

க.பொ.த உயர்தர வகுப்புக்களில் வர்த்தகக் கல்வியினைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு ஏற்ப வேலைவாய்ப்புக்களும் அதிகரித்துச் செல்கின்றன என்பது உண்மை, அத்துடன் உயர் கல்விக்கான வாய்ப்புக்களும் அதிகம். பல்வேறு வகையான தொழில் சார் கற்கைநெறிகள், சிறப்பாக வர்த்தகத்துறை மாணவர்களுக்குரியதாகக் காணப்படுகின்றன. இது தொடர்பான தகவல்களை அறிந்திருப்பது ஒருவர் தனது எதிர்காலத்தினைத் திட்டமிடவும் தான் விரும்பும் தொழிலுக்குத் தன்னைத் தயார்படுத்தவும் உதவும்.

வர்த்தக முகாமைத்துவ கற்கை நெறி மாணவர்களுக்கு இலங்கையில் பெறக் கூடிய வேலைவாய்ப்பு வசதிகளில் முக்கியமாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1) விரிவுரையாளர்
2) ஆசிரியர்
3) கணக்காளர் (தனியார் துறை, அரசதுறை)
4) முகாமையாளர்
5) வங்கி உத்தியோகத்தர்கள் பதவி
6) காப்புறுதி கம்பனிகளில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள்.
7) வரி உத்தியோகத்தர்
8) உள்நாட்டு இறை வரி மதிப்பீட்டாளர்.
9) சந்தைப் படுத்தல் உத்தியோகத்தர், சந்தை ஆய்வாளர், விற்பனை முகாமையாளர், பண்டக்குறி முகாமையாளர் பதவிகள்
10) நிர்வாக சேவை அதிகாரிகள்
11) தரக்கட்டுப் பாட்டாளர், பரிசோதகர் பதவி
12) பங்குச்சந்தை ஆய்வாளர்.
13) முகாமைத்துவ ஆலோசகர் சுங்கதிணைக்களத்தில், நிர்வாக உத்தியோகத்தர் பதவி

O

# தேவை

*பெட்டிக்குள் அளவிற்கு மீறிப் பொருள்களைத் திணித்தால் பெட்டி உடைந்து பிரிந்துவிடும். குழந்தையிடம் அளவிற்கு மீறிப் படிப்புச் சுமையை ஏற்றினால் ? அகில உலக ஆசிரியர் தினத்தை யொட்டி 1991 ஆம் ஆண்டில் யாழ். கல்விக் கோட்டமட்டத்தில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற இச் சிறுகதையை எழுதிய செ. செல்வராசா யாழ் / வைத்தீஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராயுள்ளார்.*

## செ. செல்வராசா

தபாற் காரனின் மணியோசை கேட்டதும் பரிமளத்துக்கு மனது துள்ளிக்குதித்தது. ஜெர்மனியில் இருந்து கணவனின் கடிதம் இன்று வரும் என்பது அவள் எதிர் பார்த்த ஒன்றுதான். கிணற்றடிமதிலில் இருந்து காகம் கரைந்தால் கணவனிடமிருந்து கடிதம்வரும் என்ற சாத்திரம் கடந்த நான்கு வருடங்களாகப் பொய்யானதில்லை. இன்று அந்த இடத்திலிருந்து காலையில் காகம் கரைந்து கொண்டுதானிருந்தது.

*நாடு திரும்புவதாகக் கடிதம் போட்டுவிட்டு மேற்கு ஜெர்மனியின் ஸ்ரட்ஸ் ஒன்றையும் தப்பவிடவில்லை புஷ்பநாதன். ஸ்ரட்ஸில் உள்ள மார்க்கட்டில் காணும் ஒவ்வொன்றையும் அப்படியே சுருட்டி எடுத்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுபோகவேணும் போலிருந்தது அவனுக்கு. எப்பொருள்களை வாங்குவது. எவற்றை விடுவது என்ற மனப்போராட்டம் ஒவ்வொரு சுப்பர் மாக்கற்றுகளிலும் ஏறி இறங்கும் போதும் ஏற்படும் ''இன்டியன் ஷொப்பில்'' காணப்படும் விபூதி, சந்தனக் குச்சுமுதல் சூராசா மாக்கற்றில் காணப்படும் நவீன இலத்திரனியல் பொருள்கள் வரை வாங்க ஆசைதான். அவனுடையநண்பன் இராசலிங்கமும் அவன்போன்றதொரு குடும்பகாரன். அவனும் நாடு திரும்ப இருப்பது புஷ்பநாதனுக்கு உற்சாகமாகப் போய்விட்டது. நல்ல துணை. ''ஷொப்பிங்கை'' இருவரும் சேர்ந்தே செய்தனர்.*

இன்னும் ஒரு மாதத்திற் கணவன் வரவிருக்கும் செய்தியைக் கடிதத்தில் கண்டதும் பரிமளத்திற்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை; ஒவ்வொரு கடிதத்திலும் தப்பாமல் ஒரேமகள் துஷ்யந்தியின்

படிப்புவிடயம் முக்கிய இடம்பெறும். எவ்வளவு செல வழிந்தாலும், என்னபாடுபட்டாயினும் அவளைப் படிப்பித்து உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டும்என்ற ஆதங்கம் கடிதத்தில் வெளிப்படையாகவே தெரியும். கணவனின் போக்கு அவளுக்கு நன்றாகத் தெரிந்ததுதான். அவன் பிடிவாதக்காரன்; நினைத்ததை முடிக்கத் துடிப்பவன். இந்த விடயத்திற் கணவனின் பிடிவாதத்தை வரவேற்கவே செய்தாள். அதனால் மகளின் படிப்பில் மிகுந்த கவனம். எந்த நேரமும் அவள் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்...... படிப்பு — படிப்பு.

*இப்போதெல்லாம் புஷ்பநாதனின் சிந்தனை தனது நாட்டையும் வீட்டையும் பற்றியேதான். அவன் நாட்டை விட்டுப் புறப்பட்டபோது துஷ்யந்திக்கு வயது ஆறு. இப்போ அவளுக்குப் பத்து வயது. தாயுடன் அவள் சேர்த்து எடுத்த அண்மைக்காலத்துப் புகைப்படத்தை அவன் பார்த்தபோது...... அன்று அவன் நாட்டை விட்டுப்புறப்பட்டபோது மூத்தமிட்டு 'டாட்டா' காட்டி வழியனுப்பிவைத்த துஷிக்குட்டிதானா இவள் என்ற ஆச்சரியம் எழும். அவன் அனுப்பிவைத்த 'டொட்ஜ் மார்க்' ரூபாக்களாகிமொழுமொழு குழு,குழு என்றிருந்தாள் துஷ்யந்தி. இன்னும் பத்து நாள்களில் வீட்டை அடைவதாக இருந்தாலும் வழக்கப்படி, பழக்கப்படி இன்றும் ஒரு கடிதத்தை எழுதி ''போஸ்ற்''பண்ணினான். அதிலும் துஷ்யந்தியின் படிப்புப்பற்றி நான்கு பக்கங்களுக்குமேல்.*

தொலைக்காட்சியில் இராமாயணத் தொடர் நாடகத்தைப் பார்ப்பதற்காக மகள் துஷ்யந்தியையும் அழைத்துக்கொண்டு தனது கணவனின் சகோதரி பிரியா வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் பரிமளம். அப்பொழுது பிரியாவின் மகள் நிஷா துள்ளிக் குதித்து ஓடிவந்து கொண்டிருந்தாள். துஷ்யந்தியை விட ஒருவயது மூத்தவள் நிஷா. அவள் ஆண்டு ஆறு. இவள் ஆண்டு ஐந்து படித்துக் கொண்டிருந்தாள். நிஷா படிப்பில் படுசுட்டி.

ஓடிவந்த நிஷா, பரிமளம் மாமிக்கும் துஷ்யந்திக்கும் ரொபிகளை அள்ளி வழங்கினாள்.



புலமைப்பரிசிற் பரீட்சையில் மாவட்டத்திலேயேதான் முதலாவதாக வந்த சேதியை மகிழ்வுடன் கூறினாள்.

''உண்மையாகவோ?''- மச்சாளின் சாதனையாற் பூரித்துப்போய்க் கேட்டாள் துஷ்யந்தி. ஆனால், 'திக்' கென்றது. பரிமளத்துக்கு. அடுத்த வாரம்துஷ்யந்திக்குப் புலமைப்பரிசில் பரீட்சை.' எப்படி எழுதுவாளோ... தற்செயலாகச் சித்தி அடையாவிட்டால் ? அந்த மனுசனோட இருந்த பாடில்லை. புத்தகமும் கையுமாக இருக்கவேண்டிய நேரத்தில் படம் பார்த்துத் திரிவதா..... ?'

படத்தைப் பார்க்காமல் விடவும் மனம் வரவில்லை. 'அவளின் படிப்பிற்காக நான் படம் பார்ப்பதைத் தியாகம் செய்வதா ?' இந்த வாரம் பொறுத்த கட்டம். அதிலும் இராமனைக் காண்பது எவ்வளவோ மனநிறைவு.

'இராமனாக நடிக்கும் ஹிந்தி நடிகர் எங்கட அவற்ற முகச்சாயல்தான். சரியா எண்டு சொல்லாட்டாலும் கிட்டத்தட்ட அவரைமாதிரியேதான்...... எங்கட அவர் நிறங் கொஞ்சங் குறைவு. மற்றப்படி இராமனாக நடிப்பவர் எங்கட அவரையே மாதிரித்தான்.'

நினைவு வந்ததும்..... மகளை வீட்டிலிருந்து படிக்கும்படி கண்டிப்பான உத்தரவு இட்டுவிட்டு— மலர்ந்த இரண்டு பிஞ்சுள்ளங்களை ஒரே நேரத்திற் கூம்பச் செய்ததைச் சிறிதும் உணராமல், நிஷாந்தியுடன் அவள் வீடு நோக்கிச் சென்றாள் பரிமளம் இராமாயணம் பார்க்க .....

'அவர் வரும்போது புது'ரீ.வி' கொண்டுவருவார். வீட்டிற்கு வீடு 'ரீ.வி' பார்க்கப்போற சிரமம் இருக்காது. ஆனால் வீட்டில 'ரீ.வி' இருந்தால் துஷ்யந்தியின் படிப்பும் குழம்பிப் போகுந்தான்......

*ஷொப்பிங்' செய்தே அவனின் உடம்பு கொஞ்சம் குறைந்து விட்டது. ஏனைய இடங்களில் ஐந்து டொட்ஜ் மார்க்கிற்கு வாங்கும் பொருள்களைலூண்டா*

மார்க்கெற்றில் எழுபத்தைந்து எண்பது 'பெனி'க்கிற்கு வாங்கலாம். ஆனால் இங்கு வாங்கும் பொருள்கள், உடைகள் ஒரிருதடவை யாராலேயாயினும் உபயோகிக்கப்பட்டவையாக இருக்கும். என்றாலும் ஆசை விடவில்லை. லூண்டாமாக்கற்றில் வாங்கிய பொருள்களை இரு பெரும் சூட்கேஸ்களில் அடுக்கியாகி விட்டது. 'சூட்கேசை' கைபிடிவாரில் பிடித்து இழுத்துப் பார்த்தான். சில்லுகள் உருண்டு கொடுக்க சூட்கேஸ் உடன் அசைந்து வந்தது; திருப்திப்பட்டான். உடன் வரும் நண்பனின் வற்புறுத்தலில் மேலும் சில பொருள்கள் வாங்க பாகிஸ்தானி ஒருவனால் நடத்தப்படும் "இண்டியன்சாறி ஹவுஸ்" ஸினுள் நுழைந்தான் புஷ்பநாதன்.

தாயார், படத்திற்கு அழைத்துச் செல்லாதது துஷ்யந்திக்குப்பெரும் ஏமாற்றமாகவும் ஏக்கமாகவுமிருந்தது.

'நிஷான்ரை அம்மா புதுப் பலகார மெல்லாம் செய்திருப்பா. சினேகிதியள் எல்லாரும் வந்திருப்பினம். ஒரே கூத்தும் கும்மாளமுமாயிருக்கும்... அம்மா படமும்பார்ப்பா... பலகாரமும் சாப்பிடுவா .... நான் தான் இஞ்சை புத்தகங்களோடை கிடந்து — ...'

இன்று மட்டுமல்ல, இப்படி முன்பும் பலதடவை. அன்றொருநாள், அவளைக்கோவிலுக்குக் கூட்டிக் கொண்டுபோக நிஷாவுடன் அப்பப்பா வந்திருந்தார். படிப்புக்குழம்பிவிடும் என்று சொல்லித்துஷ்யந்தியைப் பரிமளம் தடுத்து விட்டாள்.

எந்த நேரமும் படிப்பு, ரியூஷன். ரியூஷன் முடிந்து வீடு திரும்பினால், அது வெறிச்சோடிக் கிடக்கும். மாமியார் வீட்டில் தாயர்ர் படம் பார்த்துக்கொண்டிருப்பார்!

பரிமளம், வீட்டிற்குத் திரும்பி வரும்போது துஷ்யந்தி ஏதாவது ஹோம் வேர்க்' செய்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அம்மாவிற்குப் பொல்லாத கோபம் வந்து விடும்.

'அப்பாவின்ரை கடிதத்தை அவ நூறுதரம் வாசிப்பா. முழுக்க வாசிக்க என்னை விடமாட்டா. — மற்றப்பிள்ளையளின் தகப்பன் மாரோடை சைக்கிள்ளை ..... ஸ்கூட்டரிலை ... எவ்வளவு இடம்போய் வருகினம் — எனக்குத்தான் எந்த நேரமும் படிப்பு... படிப்பு — ... படிப்பு".



நினைக்க நினைக்க அவளுக்கு அழுகையே வந்து விட்டது. தலைக்குள்ளேயும் ஏதோ குடைந்து கொண்டிருந்தது.

அன்று விமானப்பயணம். சூட்கேசுக்குள் கிடந்த பொருளிற்கே இடம் மட்டாக இருந்தது. ஆனாலும் 'இன்டியன் சாறிஹவுஸ், ஸில் அவன் எடுத்த இரண்டு சேலைகளையும் அந்தச்சூட்கேஸின் உள்ளே திணிக்க வேண்டியிருந்தது. அவற்றை வாங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கூடபோன நண்பன் அப்போது தான் விற்பனைக்கு வந்த அந்த 'லேட்டஸ்ற்' சாறியை வாங்கியிருந்தான். நண்பனின் மனைவி அந்தலேட்டஸ்ற் சாறியை' உடுத்து ஊரில் உலா வரும்போது என் மனைவி அப்படி ஒரு சாறி உடுக்காவிட்டால் என்கௌரவம் என்னாவது ? எனச்சிந்தித்தான். அதனால் இந்த இரு சேலைகளையும் கடைசிநேரத்தில் வாங்கவேண்டி ஏற்பட்டது. ஏற்கனவே நிறைந்த சூட்கேசில் ஒன்றைத் திறந்தான். அதனுள் இரு சேலைகளையும்வைத்து சூட்கேசைப்பூட்டுவதற்காக முடமுயன்றான். 'டக்' என்ற ஓசை கேட்டது. அளவிற்கு மிஞ்சிப் பொருள்களைத் திணித்து முன் பக்கம் முடமுயல, பின்பக்கம் பிணைச்சல் 'டப்' என்று விட்டுப்போயிற்று.

விமானத்தளத்திற்குப் போக 'டாக்ஸி'யில் இருந்து இறங்கிய புஷ்பநாதனின் நண்பன், வெளியே பிதுங்கிய புதுச்சேலை மற்றும் பொருள்களை மீண்டும் உள்ளே தள்ளி, சூட்கேசைப் பின்பக்கம் முடமுயன்ற புஷ்பநாதனைப்பார்த்து வாய்விட்டுச்சிரித்தான்.

படம் முடிந்து பரிமளம் வந்து பார்த்தபோது துஷ்யந்தி முகட்டைப்பார்த்துச்சிரித்துக்கொண்டிருந்தாள். கைவிரல்களை எண்ணிக்கணக்குப் பார்த்தாள். 'இந்தக் கணக்குக்கு என்ரை விரல்காணாது இல்லை யில்லை, கூடிப்போச்சுது' என்று இடைக்கிடை சொல்லிக்கொண்டிருந்தாள். தாயார் பரிமளம் வந்து முன்னால் நின்றது அவளுக்குத் தெரியவே இல்லை. கூட வந்த நிஷாந்தியின் தாயார் சொன்னாள். "மச்சாள், "இப்பவே மந்திகை ஆசுப்பத்திரிக்குக்கொண்டு போவம் — நேரத்துக் குப் போனால் மாத்திப் போடலாம்."

□

# நினைவில் நிலைப்பது!

*மாணவர்களிடம் கேள்வி ஒன்றைக் கேட்கிறார் பாடசாலைப் பரிசோதகர். மாணவர்களின் பதில், அவரையே நையாண்டி செய்வதுபோல் இருக்கிறது; ஆனால் அவர் பதற்றப்படவில்லை; பொறுமையைக் கடைப்பிடித்துநிலைமையை ஆராய்கிறார்... உத்தியோக மொழித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளவர் தரும் சுவையான சம்பவம் இது.*

**அ. வி. மயில்வாகனம் B. A.**

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளின் முன்னர் நடந்த சம்பவம் இது. பாடசாலைப் பரிசோதகராக (Inspector of Schools) நான் பதவியேற்றுச் சில மாதங்களே ஆகியிருந்தன. வழமைபோல் முன் கூட்டியே அறிவித்துவிட்டுப் புத்தளம் அரசினர் பாடசாலைக்குச் சென்றேன். வகுப்புக்களுக்குச் சென்று மாணவர்களைப் பரீட்சிப்பது பரிசோதகரின் கட்டாயக் கடமைகளுள் ஒன்று. முதலில் ஐந்தாம் வகுப்பிற்குச் சென்றேன். மாணவர்களின் பொது அறிவைச் சோதிப்பதற்காக மிகவும் இலகுவான ஒரு கேள்வியைக்கேட்டேன்.

''நீங்கள் எந்த மாகாணத்தில் வாழ்கிறீர்கள்?''

யாருமே பதில் சொல்லவில்லை.

''எமது நாடு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பெரும் பாலான மாகாணங்கள் திசைகளின் அடிப்படையிற் பெயரிடப்பட்டிருக்கின்றன. அப்படியான ஒரு மாகாணத்திலேதான் புத்தளம் இருக்கின்றது. அந்த மாகாணத்தின் பெயர் என்ன?'' கேள்வியை நான் விளக்கினேன்.

எவரிடமிருந்தும் பதில் வரவில்லை.

ஆசிரியரைப் பார்த்தேன். அவர் தலை குனிந்தபடி நின்றார்.

''அடுத்த வகுப்பிற்குப் போய்ச் சோதித்துவிட்டு உங்களிடம் திரும்பி வருவேன். இந்தக் கேள்விக்குரிய பதிலை அப்போது நீங்கள் சொல்ல வேண்டும்''

அடுத்த வகுப்பிலுள்ள மாணவர்களைச் சோதித்துவிட்டு, மறக்காமல் மீண்டும் ஐந்தாம் வகுப்பிற்குச் சென்று அதே கேள்வியைக் கேட்டேன்.

''மடமயில் வாகனம்''— 'பட்' டென்று வந்தது பதில்.

'திக்' கென்றது எனக்கு. எனினும் என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேறொரு மாணவனைக் கேட்டேன். அதே பதில்தான் வந்தது, ''மட மயில்வாகனம்''.

மேலும் சில மாணவர்களைக் கேட்டேன்; அதேபதில் தான்.

சரியான பதிலைத் தெரிந்து கொண்டு விட்டோம் என்ற நம்பிக்கையும் உற்சாகமும் அவர்களிடம் காணப்பட்டன. குரலில் ஒரு வித அப்பாவித்தனமும் தொனித்தது.

மீண்டும் ஆசிரியரைப் பார்த்தேன். கடுங் குளிரில் நடுங்குவதைப் போன்று உடம்பு 'வெட வெட' த்துக் கொண்டிருந்தது.

''நான் இப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை. சரியான பதிலைத்தான் நான் சொல்லிக் கொடுத்தேன்'' என் கால்களில் விழுந்து கெஞ்சி விடுவாரோ என்று நினைக்குமளவிற்கு நிலைகுலைந்து நின்றார்.

அவருடன் உரையாடியதிலிருந்து உண்மை தெளிவாகியது. அவர் சரியான பதிலைத்தான் மாணவர்களுக்குச் சொல்லிருக்கிறார். நான் அடுத்த வகுப்பறையிலே இருந்த படியால், சற்று மெதுவான குரலில் அதைச் சொல்லியிருக்கிறார். மாணவர்களிற் பெரும்பாலோர் முஸ்லிம் மாணவர்கள். அதிக சத்தமின்றி அவசரத்தில் அனைவரும் நெட்டுருப்பண்ணிக் கொண்டிருந்ததால் வட மேல் மாகாணம், என்பது மடமயில் வாகனம் என்றாகி விட்டது.

மாணவர்களின் பதிலைக் கேட்டவுடன் நானும் உணர்ச்சி வசப்பட்டு, அதிகார வர்க்கத்திற்குரிய ஆக்கிரத்துடன், விஷயத்தைப் பெரிதுபடுத்தி, முறைப்பாடு, விசாரணை என்று தொடர்ந்திருந்தால், எனக்கு ஏற்பட்டதாக நான் ஒரு கணம் கற்பனை பண்ணிய அவமானத்தை, அகில இலங்கைக்கும் அறிவிக்கும் கைங்கரியத்தை நானே செய்திருப்பேன். □

*''பிணி தீர்ப்பவனாய் அன்றேல் ஓர் ஆசிரியனாய் வருவாயாக'' எனப் பண்டைய இளைஞர்களைப் பார்த்துக் கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டில் பகர்ந்துள்ளார்*

# விளக்கு வெளியீட்டு விழாவில்...

**இ**னீர் என்ற குரலில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிள்க தமிழ்த் தேசியப் பண்ணிசைக்க, தமிழீழகக்கல்வி மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் இந்துக் கல்லூரிக் குமாரசாமி மண்டபத்தின் முன் ஏற்றிய தமிழீழத் தேசியக்கொடி ''விளக்கு வெளியீட்டு விழாவிற்கு வாருங்கள்'' என அனைவரையும் அழைப்பதைப்போன்று காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

**க**ல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோர் விளக்கேற்ற மங்கலச் சூழ்நிலை உருவாகியது.

**ம**ண் மீட்புப் போரிலே தம் ஆருயிரைத் தியாகஞ் செய்த மாவீரர்க்கான ஆன்மார்த்த அஞ்சலியைத் தொடர்ந்து, ஆற்றல் மிக்க அமிழ்தத் தமிழ் மொழி ஆண்டாண்டு காலம் வாழ வேண்டும் என்ற நல்லாசை இசைத் தேனாய் இனித்தது.

**த**மிழ் ஈழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, வந்திருந்தோர் அனைவரையும் வார்த்தைகளால் வரவேற்க அருள் மாஸ்டரும் மாணவர் அமைப்பினரும் இன் முகத்துடன் அவர்களுக்கு இருக்கையீந்து உபசரித்தஙனர்.

**தே**சியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் கருத்துக்களை எதிரொலித்த திரு. தமிழ்ச்செல்வன், ''மாவீரர்களின் மகத்தான தியாகத்தினாற்றான் தமிழீழத்திற் கல்விப் பயிர் செழித்து வளர்கின்றது'' என்பதை நினைவூட்டினர்ா.

**ஆ**சிரியப் பணியின் தரத்தையோ பயனையோ அளவிடும் திட்டவட்டமான அளவுகோல் எதுவும் இல்லை. ஆசிரியத்திற்கென நோபல் பரிசும் வழங்கப்படுவதில்லை. பாராட்டையோ நன்றியையோ எதிர்பார்க்காத அர்ப்பணிப்பு மனப்பான்மையுடைய ஆசிரியர்களாலேயே உலகம்வாழ்கின்றது, வளர்கின்றது - என வியந்தார் விழாத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம்.

**அ**ருட்திரு பிரான்சிஸ் யோசப் அடிகள் - கற்பிக்கும் ஆசிரியர் எஞ்ஞான்றும் கற்பவராகவும் இருக்க வேண்டும். கல்விமான்களின் கருத்துக்களாலும் அனுபவங்களாலும் ஆசிரியர்கள் பயன்பெற ''விளக்கு''வழி செய்யும் - என உறுதி கூறினார்.

**மு**ன்னை நாள் அதிபர்கள் செல்வி இ. இராசரத்தினம் (வேம்படி மகளிர்) திரு. சி. அப்புத்துரை (மயிலிட்டி கலைமகள்) திரு. தி. சிவசாமி (வேலணை ஆத்திசூடி) திருவாட்டி ஜெ. கிருஷ்ணசாமி (சுதுமலை சிந்மயபாரதி) ஆகியோர் ''விளக்கு'' இதழ்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். திரு. ச. பொன்னுத்துரை (கைதடி விக்னேஸ்வரா) சார்பில் சாவகச்சேரி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன், திரு. க. சிதம்பரப்பிள்ளை (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்) சார்பில் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா ஆகியோர் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**வி**ளக்கு இதழின் அமைப்பு, கட்டுரைகளின் தரம் பொருத்தப்பாடு போன்றவற்றைப் பாராட்டி மதிப்புரை வழங்கினார் திரு. சு. வேலுப்பிள்ளை.

**தி**னைத் துணைச் சொற்களாற் பனைத் துணை நன்றியைப் புலப்படுத்தினார் இதழாசிரியர் திரு. சி. சிவசரவணபவன்.

**அ**னைத்து நிகழ்ச்சிகளையும் நெறிப்படுத்தினார் துணையாசிரியர் திரு. க. வை. தனேஸ்வரன்.

# கற்பனையல்ல .... உண்மை!

கடமையில் ஈடுபட்டிருக்கும் பாடசாலை அதிபரை நோக்கிப் பெற்றோர் அணியொன்று முன்னேறி வருகின்றது. காரணம் தெரியாமல் அவர் தடுமாறுகின்றார். ''ஆங்கில ஆசிரியை எங்கே? '' என்ற கேள்விக்கணை வீசப்படுகின்றது. --- தன் உத்தியோக வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு வித்தியாசமான பெற்றோர் சந்திப்பை விபரிக்கும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை அதிபர். ஒரு நல்லாசிரியையின் பண்புகளையும் பட்டியலிடுகின்றார்.

சு. லோகதாசன்

**பா**டசாலை தொடங்கிப் பதினைந்து நிமிடங்களாகி விட்டன. வகுப்பறைகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் நேர அட்டவணைப்படி கற்றல், கற்பித்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். எனது அலுவலகத்திலிருந்து ஆசிரியர் வரவுப் பதிவேட்டை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். திடீரென்று ஒரு சலசலப்பு. என்னை உடனடியாகச் சந்திக்க வேண்டும் எனச் சொல்லிக் கொண்டு பெற்றோர் குழுவொன்று வந்திருப்பதாக உப அதிபர் தெரிவிக்கின்றார். ''இந்த வேலையை முடித்துவிட்டு வருகிறேன், இருக்கச்சொல்லுங்கள்'' என்று சொல்லி உப அதிபரை அனுப்பினேன்.

எனக்கு வேலைஓடவில்லை, 'எதற்காக வந்திருப்பார்கள்? பாடசாலையில் ஏதாவது அசம்பாவிதம் நடந்திருக்குமோ?'

காரணத்தை என்னால் ஊகிக்கவே முடியவில்லை. ஏதாவது பிரச்சினையென்றால், என் தாமதம் அதைப் பூதாகாரமாக்கி விடும் என என் உள்ளுணர்வு எச்சரிக்க, பெற்றோரிடம் சென்றேன். வகுப்பறைகளிலிருந்து மாணவர் சிலர் அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''ஆங்கில ஆசிரியை எங்கே சேர்?'' எவ்வித சம்பிரதாயமுமின்றி முதலாவதாக வந்தது இந்தக் கேள்விக்கணை.

'அட, யாராலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவ்வித குற்றமும் சுமத்தப்பட முடியாதவர் என நான் கருதிய ஆங்கில ஆசிரியை மீதா இவர்கள் குற்றங்காண முயல்கின்றனர்!'

பதிலேதும் சொல்லாது, அவர்களைப் பார்த்தேன். முகங்களிற் தெரிந்த சினேக பாவம் எனக்குத் தெம்பூட்டுகின்றது.

''அவவுக்கு இடமாற்ற உத்தரவு வந்துவிட்டதாம், உண்மை தானா?''

''ஆம்!''

''இடமாற்றத்தை நிறுத்த வேண்டும். இப்போதே வாருங்கள், கல்விக் கந்தோருக்குப் போய் நடவடிக்கை எடுப்போம் ......... ஆசிரியையின் சேவையை நாம் இழக்கவே முடியாது''

ஒரே தடவையிற் பலர் பேசியதன் சாரம் இது.

நான் எதிர்பார்த்திராத திருப்பம். என்னவோ ஏதோ என்று பயந்த எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அதிர்ச்சி!

அந்த இடமாற்றத்தை நான் வரவேற்கவில்லை என்பதைக் கூறி, ஆசிரியையின் கஷ்டங்களை நான் நன்குணர்ந்தபடியால் மனிதாபிமான ரீதியில் இடமாற்றத்தைத் தடுக்க இதுவரை நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்பதைத் தெளிவாக்கினேன்.

தனியொருவராகத் தனது வீட்டுக் கடமைகளைச் செய்து பஸ்ஸில் ஏறி யாழ் நகரிலிருந்து தினமும் இங்கு வந்து செல்வது ஒரு பெண்ணின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எனினும் நல்ல ஓர் ஆசிரியையிடம் கற்கும் சந்தர்ப்பத்தைத் தம் பிள்ளைகள் இழக்கக்கூடாது என்பதிலும் அவர்கள் குறியாயிருந்தார்கள்.

''போக்குவரத்துப் பிரச்னையை நாங்கள் தீர்க்கத் தயார். எங்கள் செலவிற் கார் ஒன்றை ஏற்பாடு செய்வோம்'' ஒரே குரலிற் கூறினார்கள்.

''உங்கள் மனப்பாங்கு எனக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையுந் தருகிறது......எமது பாடசாலையின் நிலையைக் கருத்திற் கொண்டு, இடமாற்றத்தை நிறுத்துவது சம்பந்தமாக ஆசிரியையுடன் நான் ஏற்கெனவே கலந்துரையாடிவிட்டேன் ........ இந்தப் பிள்ளைகளை விட்டுப் பிரிய அவவுக்கும் மனமில்லைத்தான். ஆனால் அவவுடைய குடும்ப நிலையை யோசித்துப் பார்த்தால், நீங்களே அவவை வற்புறுத்தமாட்டீர்கள் .....பெற்றோராகிய உங்களின் செலவில் தினமும் இங்கு வந்து போவதை ஆசிரியையின் தன்மான உணர்ச்சி ஏற்றுக் கொள்ளுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்''

தயக்கத்துடன், மனவருத்தத்துடன் அவர்கள் திரும்பிச் சென்றனர்.

என்னுடைய உத்தியோக வாழ்க்கையில் இப்படி ஒரு சந்திப்பு நடந்தது இதுதான் முதற்றடவை. எத்தனையோ ஆசிரியர்கள் இங்கு வந்துபோய் விட்டார்கள். அவ்வேளைகளில் அதிகம் அலட்டிக்கொள்ளாத பெற்றோர்கள் இப்போது மட்டும்

ஏன் இப்படி நடந்துகொண்டார்கள்?

என் நினைவுத் திரையில் அந்த ஆசிரியை தோன்றுகின்றார்..........

பஸ்சிலிருந்து இறங்கியதும் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்கு வரும் தோற்றம்-

வந்ததும் வணக்கமும் வாழ்த்தும் தெரிவித்துவிட்டு நேரடியாகத் தன் வகுப்பறைக்குச் செல்லும் பாங்கு-

தன் வகுப்பறைச் சுத்தத்தை மட்டுமல்லாமல் பாடசாலைச் சுற்றாடலின் சுத்தத்தையும் கவனிக்கும் ஆர்வம்-

கற்றல் முயற்சியில் மாணவர்களை முழுமையாகச் செயற்பட வைக்கும் ஆற்றல்-

இணைப்பாட வேலைகளைத் தானாகவே முன்வந்து பொறுப்பேற்பதிலும் அவற்றிற்காகச் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் வெளியிட்ட தலைமைத்துவப் பண்பு-

அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் மாணவர் மத்தியில் ஏற்பட்ட வியத்தகு வளர்ச்சி

பாடசாலையிலிருந்து மாணவர்கள் வெளியேறும்போது சீர் வரிசைக் கட்டொழுங்கைக் கண்காணிக்கும் பொறுமை......

பெற்றோர்களின் கோரிக்கை முழுக்க முழுக்க நியாயமானது தான்; இத்தகைய ஓர் ஆசிரியையின் சேவையை யார் தான் இழக்கவிரும்புவர்?

''இப்பாடசாலை மாணவருக்கு ஆங்கிலம் வராது; நாம் எடுக்கும் முயற்சிகள் பலன் தருவதில்லை'' என மற்றையோர் கைவிட்ட வேளையில், துணிந்து அப்பொறுப்பை ஏற்று மாணவர்களின் நிலைக்கு இறங்கிக் கற்பித்து பரீட்சைகளில் நல்ல புள்ளிகளை எடுக்கச் செய்து ஆங்கிலப் போட்டிகளில் பிரபல பாடசாலை மாணவர்களுடன் போட்டியிட்டு வெற்றியீட்ட வைத்து, ''பொருத்தமான கற்பித்தல் முறைகள் மூலம், பின்தங்கியமாணவர்களையும் முன்னேற்றலாம்'' என்பதை நிரூபித்த அந்த ஆசிரியையின் பெயரைக் குறிப்பிடாவிட்டால், என் கற்பனை வளத்தால் நான் கதைய ளந்து விட்டேன் என யாரும் முடிவுகட்டி விடுவார்கள். திறமையும் கடமையுணர்ச்சியும் மிக்க ஓர் ஆசிரியரால், அதிபருக்கும் நற்பெயரை ஈட்டிக்கொடுக்க முடியும் என்பதை உணர்த்திய அந்த ஆசிரியை- திருவாட்டி பி. எம். அழகரத்தினம்! ஆம், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம், வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிற் சில ஆண்டுகள் கடமையாற்றிவிட்டு. இப்போதும் யாழ். புனித, யோண் பொஸ்கோ பாடசாலையிற் கற்பித்துவரும் அதே அழகரத்தினம் தான்!

○

# பாடசாலை... ஒருசமூகநிறுவனம்

*மாணவர்களும் ஆசிரியர்களுஞ் சேர்ந்து கற்றல் கற்பித்தல் வேலைகளிற் சில மணிநேரம் ஈடுபடுவதற்காக... மட்டுந்தான் பாடசாலைகள் இருக்கின்றனவா? சமூகத்திற்கும் பாடசாலைக்குமிடையே இருக்க வேண்டிய நெருக்கமான தொடர்பை வலியுறுத்தி, அதற்கான வழி வகைகளையுங் குறிப்பிடும் கட்டுரையாளர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.*

கி. நடராசா, B. A. Dip. in. Ed, M.A (Education)

பாடசாலை என்பது கல்லாலும் மண்ணாலும், கட்டப்பட்டு மாணவர் ஆசிரியரை உள்ளடக்கிய கட்டிடத் தொகுதி அன்று: பல திறன்களை உடைய நுகர்வோரின் மத்தியில் அவர்களுக்கு விருப்பமற்ற அறிவை விற்கும் சந்தையுமன்று. அது பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண்ட ஆன்மீகத் தொகுப்பும் துடிப்புமுள்ள ஒரு சமூகமையம்! சக்தியுமுள்ள வாழ்க்கையை எந்நேரமும் ஒளிவிடும் வியப்புக்குரிய நிலையம்; சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்கும் பணியில், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், மனப்பாங்குகள் என்பனவற்றைக் குழந்தைகளிடையே மாற்றியமைக்கும் ஒரு நிறுவனம். பலமான உடலமைப்பு, விழிப்பான மனநிலை, உறுதியான உணர்வு நிலை, செழுமையான கலாசாரம், திறமையான சமூகப்பாங்கு என்பனவற்றைச் செப்பனிட்டு நாட்டின் விதியை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் நிறைந்த இடம். சுருக்கமாகச் சொல்வதானால் பாடசாலை சமூகத்தின் முக்கியமான ஓர் அங்கம் எனலாம்.

கடந்த காலங்களிற் பாடசாலை என்பது அறிவை உற்பத்தி செய்யும் நிலையமாகவே கருதப்பட்டது. புத்தகம் என்ற இயந்திரத்தின் ஊடாக ஒரே வகையான அறிவு ஊட்டப்பட்டது. தனிமனித வேறுபாடு, நாட்டின் தேவைகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. கடுமையான மனனமும் மீள ஒப்புவித்தலுமே அதன் செயற்பாடுகளாக விளங்கின. சத்தமின்றிச் செலுத்தப்படும் மந்தைகளாக மாணவர் கருதப்பட்டனர். பரீட்சை ஒன்றே அதன் குறிக்கோளாக அமைந்தது. மாணவனை வழி நடத்துவதற்குப் பிரதான கருவியாகப் பிரம்பே காணப்பட்டது. ஆசிரி

யன் ஆணி வகுப்புச் செய்விக்கும் பொலிஸ் காரனாகக் காணப்பட்டான். கலைத்திட்டத்துடன் இணைந்த செயற்பாடுகள் அந்நியப்படுத்தப் பட்டிருந்தன ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. கல்விக்கு இரண்டு கால்கள் இருப்பதாகக் கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். அவை தத்துவமும் உளவியலும் ஆகும். உளவியல் கல்வியின் வழிமுறைகளைத் தீர்மானிக்க, தத்துவம் கல்வியின் நோக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் தற்காலப் பாடசாலைகளின் தொழிற்பாடுகள் பின்வருமாறு வரையறை செய்யப்படுகின்றன.

1) வாசித்தல், எழுதுதல், கணிதம் ஆகிய திறன்களை வளர்த்தலும், ஓய்வு உரிமை, பொறுப்பு, தொடர்பு என்பவற்றில் ஆழமான கவனஞ் செலுத்தி அவற்றின் பயன்பாட்டை வளர்த்தலும்.
(2) ஜனநாயகத்திற்கான பயிற்சி.
3) கலாசாரத்தைப் பேணுதல்.
4) விஞ்ஞான ரீதியிலான மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
5) வாழ்க்கையின் ஏனைய துறைகளுடன் இறுக்கமான தொடர்பை வளர்த்தல்.
6) சமூகம், நாடு, உலகம் என்ற வகையில்இணைந்து வாழும் பாங்கை உறுதிப்படுத்தல்.
7) தனிமனித வேறுபாடுகளை அங்கீகரித்தல்.
8) சமூக நீதிக்கான உணர்வினைத் தூண்டுதல்.
9) ஒழுக்க நெறிக் கல்விக்கான பொறுப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.
10) தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்தல்·
11) தகவல்களைத் திணிக்காது செய்முறைத் தொழிற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல்.
12) சுய விருத்திக்கான சுதந்திரங்களை முன்னெடுத்துச் செல்லல்.
13) சமூக மாற்றத்தின் முகவர் நிலையமாகத் தொழிற்படுதல்.

மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளை அவதானிக்கும் போது பாடசாலை சமூக சேவையின் மையமே என்பதைக் காணலாம். BRANFORD என்பவர் ''பாடசாலை, சித்தாந்தத்தின் உருவமாகவும், உலகத்தின் மாதிரியாகவும் இருத்தல் வேண்டும். சாதாரண விவகாரங்களுடன் நில்லாமல், மனித சமுதாயத்தை உள்ளடக்கி எக்காலத்திற்கும் ஏற்றதாக அமைதல் வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார். T.M GREENE என்பவர் ''ஒரு நல்ல பாடசாலையின் நிகழ்ச்சிகள் சமூகத்தில் இணைந்து வாழும் மக்களின் தேவைகளிலிருந்து வேர்விட வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார். பொதுவாகப் பாடசாலைகள் தனிப்பட்ட பிரசைகளின் கடமைகளையும் பொறுப்புக்களையும் வலியுறுத்தி, விருப்பத்துடனும் திறமையுடனும் நாட்டிற்குச் சேவை செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சியளித்து ஒருமாதிரிச் சமூகமாக மாற வழி வகுக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலுள்ள பாடசாலைகளும் அந்நாட்டு வாழ்வின் வடிவமைப்பாக அமைதல் வேண்டும். பாடசாலை என்பது மாணவர் மட்டும் கற்கும் நிலையமாக அமையாது சமூகமே கற்கும் நிலையமாக அமைதல் வேண்டும். அதிகளவிலான பணத்தைச் செலவிட்டு கட்டிடம், உபகரணம் ஆகியவற்றை ஏற்படுத்தி அப்பாடசாலைப் பயன் ஒரு சில நாள்களுக்கு மட்டும் பயன்படுவதாயின் அது ஒரு தவறான கல்வித் தத்துவமாகும். பாடசாலைக் கட்டிடமும், சில வளங்களும் பாடசாலைக்குப் புறம்பான நேரங்களில் சமூகப் பயனுள்ள வேறு தேவைகளுக்காக உபயோகப்படக் கூடியவையாக இருக்கவேண்டும்.

பாடசாலையைப் பல வழிகளில் சமூக சேவையின் மையமாக அமைத்துக் கொள்ளலாம். பல்வேறு பாடங்களின் கலைத்திட்டமும் மையப் பொருள்களும் உண்மை வாழ்க்கையுடன் தொடர்புடையனவாக, சமூகப் பிரச்சினையை மையமாகக் கொண்டே அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பாடசாலைகளில் சமூக ஆய்வுச்சங்கங்கள் அமைக்கப்பட்டுச் சமகால சமூகப் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். உதாரணமாக வீதிகளின் நிலைமைபற்றி எழுத்தறிவு பெற்றோரின் தொகை பற்றி ஆராய்தல். முதலுதவி நிலையங்கள், முதியோர் கல்வி நிலையங்கள் போன்றன மாலை நேரங்களில் நடத்தப்படுவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும். பாடசாலைகளைப் பயனுள்ள பொழுது போக்கு மையங்களாக மாற்றுவதன் மூலமும் சமூகமையமாக்க முடியும். விளையாட்டுக்கள், நாடகங்கள். வானொலி நிகழ்ச்சிகள், பொருட்காட்சி, தேசிய நாள்களைப் பிரதிபலிக்கும் விழாக்கள் போன்றவற்றை நடத்தலாம். பாடசாலை நூலகங்கள் மாணவர்கட்கு மட்டுமன்றி அறிவை விருத்தி செய்ய விரும்பும் வளர்ந்தோர்க்கும் பயன்பட வேண்டும். பாடசாலை ஆசிரியர், பெற்றோர் பழைய மாணவர் போன்றோர் இணைந்து சிநேக பூர்வமான முறையில் சமூக பொருளாதார கல்விப் பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல்களை நடத்தி அவற்றின் அடிப்படையிற் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கலாம்.

புத்தகத்திற்குள் மட்டுமே கல்வி இருக்கின்றது என்ற நிலை மாற்றப்பட வேண்டும். சமூகத்தை ஓர் ஆய்வு கூடமாகக் கருதி, சுற்றுலாக்கள் மூலம் புதிய எண்ணக் கருத்துக்களை விருத்தி செய்யலாம்.

இத்தகைய செயற்பாடுகள் பாடசாலை, சமூகம் ஆகியவற்றை மேலும் இறுகப் பிணைக்கும்; இரண்டினதும் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கும் வழிகோலும்.

# மௌனம் கலைகிறது....!

*கல்வி கற்பதற்காகப் பாடசாலையிற் சேர்பவர்கள், சிறிது காலத்தின் பின், அடிப்படை அறிவைக் கூடப் பெறாமல், ஏன் இடைவிலகுகின்றனர்? தனியாள் வேறுபாடு, தேவை போன்றவற்றைக் கவனியாமல், ஒரே மாதிரியான கல்வியை அலுப்பூட்டும் வகையிற் கற்பிப்பதும் இதற்குக் காரணமாக இருக்குமோ? மாணவரின் நிலையில் நின்று முக்கியமான கல்விப் பிரச்சனையொன்றை ஆராய்கின்றார், யாழ். கல்வித் திணைக்களத்தில் மறைசாராக் கல்விக்குப் பொறுப்பாக உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்.*

**எஸ். சுப்பிரமணியம், S. L. E. A. S.**

நான் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. எனது பெற்றோர் அதிகம் படிக்காதவர்கள்.

ஒரு தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆண்டு 11ல் நான் படிக்கின்றேன். பத்து வருடங்களுக்கு மேலாகக் கணக்குப் படித்திருக்கின்றேன். ஒவ்வொரு வருடமும் வரும் 130 பள்ளி நாள்களிலும் நாளொன்றிற்கு 40 நிமிடங்களுக்குக் குறையாமற் படித்திருக்கின்றேன். கணக்குப் படிக்க நான் நிறைய நேரத்தைச் செலவு செய்கிறேன். இருந்தாலும் எனக்குக் கணிதத்திற் சராசரி 40 புள்ளிகள்தான் கிடைப்பது வழக்கம். ஆனால் கணக்கு வாத்தியார் மாறும்போது புள்ளிகள் கொஞ்சம் ஏறும்; சில வேளை இறங்கும். இதற்கு நான்தான் காரணமோ, அல்லது கணிதம் என்றால் அப்படித்தானோ தெரியாது.

எனது கணித அறிவைப் பார்த்து என்னுடைய கணக்கு வாத்தியாரும், அதிபரும் ''ரியூசனுக்குப் போ'' என்று சொல்லுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்பாவும் அம்மாவுங்கூட அப்படித்தான் சொல்கிறார்கள். ஆனாலும் எங்கடை குடும்ப நிலை இதற்கு இடங்கொடுக்கிறதாக இல்லை.

எங்களின் வகுப்பில் நான் மாத்திரமல்ல, என்னைப்போல நிறையப்பேர் இருக்கிறார்கள். எங்களுக்குக் கணக்குப் படிக்க விருப்பம். ஆனாலும் வாத்தியார் எங்களைப் பார்த்து ''மொக்குகள், மூளையில்லாததுகள்'' என்று அடிக்கடி ஏசுகிறார். நாங்கள் சிந்திக்கத் தெரியாத அஃறிணை இனம் என்று அவர் சொல்லாமற் சொல்லுகிறார் என்று எங்களுக்கு விளங்குகிறது. ஆனால் இதை ஆரிடம் சொல்லலாம்? சொன்னால் அவர்களும் எங்களை மொக்குகள் என்று உறுதிப்படுத்தி விடுவார்கள் என்ற பயம். அதனால் யாருக்கும் சொல்லுவதில்லை. நாங்கள் மௌன சாமிகள். ஏனினால் தலையைக் குனிந்து கொண்டிருப்போம். எங்களால் வேறென்ன செய்ய முடியும்.

சமீபத்தில், பத்திரிகையில் வாசித்த செய்தி ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. ''யாழ்ப்பாணத்தில் ஆண்டு ஒன்றிற் சேருகிற 20000 பிள்ளைகளில், அரைவாசிப் பேர்தான், சாதாரண தரம் வரைக்கும் படிப்பைத் தொடருகிறார்கள். மீதிப் பேர் பாடசாலையை விட்டு இடையில் விலகிப் போய்விடுகிறார்கள். இதனால், அடிப்படை அறிவைப் பெறாதவர்களின் தொகை அதிகரித்து, சமூக அபிவிருத்தி ஏற்படுவது தாமதமாகின்றது. இந்த இடைவிலகல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.''

''படிப்பைத் தொடர்கிற 10000 பேருள், சராசரி 4000 பேர்தான் உயர்வகுப்புக்குப் போகிறார்கள்; அவர்களுள் 1200 பேர்வரை பரீட்சையிற் சித்தியடைகிறார்கள். அவர்களுள் 400-500 பேர்தான் பல்கலைக் கழகத்துக்குப் போகிறார்கள்''

பத்திரிகைச் செய்தியிற் சிறிதும் பொய்யில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்லுவேன். எங்களுடைய பள்ளிக் கூடத்தில் என்னோடு ஆண்டு ஒன்றிலே சேர்ந்தவர்கள் 50 பேர். ஆண்டு பதினொன்றிலை 25 பேர்தான் இப்போது இருக்கிறோம். அவர்கள் ஏன் விலகினார்கள் என்பது எனக்குத் தெரியும்.

பள்ளிக் கல்வி அவர்களைச் சிறிதும் கவரவில்லை; அது அவர்களுக்கு வெறுப்பையூட்டியது. அவர்களுடைய பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதைப் பற்றிப் பள்ளியிலுள்ள எவருமே யோசித்துப் பார்க்கவில்லை. அதற்குப் பொருத்தமான கல்வி வழங்கப்படவில்லை.

அவர்களைவிடப் பொருளாதாரத்தில் நாங்கள் சிறிதளவு மேம்பட்டிருந்தாலும், எல்லோருக்குமுள்ள அடிப்படைப் பிரச்னை ஒன்றுதான்.

எங்களுடைய தேவை என்ன என்பதை அறிய வாத்திமார் முயல்வதில்லை. எங்களிடமும் சில கெட்டித்தனங்கள், திறமைகள் இருக்கின்றன. அவற்றை இனங்கண்டு வளர்ப்பதற்கும் அவர்கள் முன்வருவதில்லை.

எங்களுக்குத் தேவையற்ற விஷயங்களை எங்களிடம் திணிக்கப் பார்க்கிறார்கள்; பாடமாக்கச் சொல்லி நெருக்குகிறார்கள். பாடமாக்கியிருக்கிறோமா என்பதை அறியச் சோதனை நடத்துகிறார்கள்,

பாடமாக்குவதில் எங்களுக்கு அக்கறையில்லை. தேவையில்லாத விஷயங்களை நாங்கள் ஏன் பாடமாக்க வேண்டும்? பாடமாக்காதபடியால், போதிய புள்ளிகளை நாங்கள் பெறுவதில்லை. அதனால் நாங்கள் மொக்கர் என்ற முடிவிற்கு அவர்கள் வருகிறார்கள்,

அவர்களுடைய முடிவு பிழை என்பது எங்களுக்குத் தெரியும்.

அதை நாங்கள் சுட்டிக் காட்டினால், அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் நாங்கள் பேசாமல் இருக்கிறோம். நாங்கள் மௌன சாமிகள்.

பல்கலைக் கழகத்துக்குப் போய்ப் படிக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்குமுண்டு. ஆனால் இதை வாய்விட்டுச் சொன்னால், அவர்கள் சிரிப்பார்கள். ஏனென்றால் ; அவர்களின் தீர்ப்பின்படி நாங்கள், ''மொக்குகள், பின் தங்கியவர்கள், மெல்லக் கற்பவர்கள்''. பல்கலைக் கழகத்துக்குப் போகாமல் நாங்கள் பெற்றுக் கொள்ளும் பட்டங்கள் இவை.

நாங்கள் பிறக்கும் போது அப்படித்தான் பிறந்தோமா? பிறந்த பிறகுதான் இப்படியானோமோ? அல்லது பள்ளிக் கூடத்துக்குப் போனதின் பின் தான் மாறினோமோ என்பது தெரியாது. ஆனால் என்னை ''மொக்கு'' என்று கணக்குவாத்தியார் ஏசுகிறதிலிருந்து எனக்கு விளங்குகிறது. பள்ளிக்கு வந்ததன் பின் தான் மாறியிருக்க வேணும். என்னுடைய வீட்டிலை அப்புவோ, அம்மாவோ என்னை ''மொக்கு'' என்று ஏசுவதில்லை. நாளாந்த வாழ்க்கையிலை வீட்டில் ஏற்படுகின்ற சில பிரச்சனைகள், சிக்கல்களை அவையோடை சேர்ந்து நான் விடுவித்திருக்கிறன். என்னிடம் சில திறமைகள் இருப்பது அப்புவுக்கும் அம்மாவுக்கும் தெரியுமாக்கும்.

இப்போது எனக்கிருக்கிற பிரச்சனை, நான் தற்செயலாக உயர்தர வகுப்புக்குத் தகுதி பெறாவிட்டால் பள்ளியை விட்டு விலக வேண்டியிருக்கும் என்பது தான். இவ்வளவு நாளும் வீட்டாரின் தயவில் வாழ்ந்தவன் நான். பள்ளியை விட்டால் இனி நான் அப்படித் தொடர்ந்து இருக்க இயலாது.

''தனித்து வாழக்கூடிய வல்லமை வேணும்'' என்று அப்பு இடைக்கிடை சொல்லுவார். அம்மாவும் என்னைப் பார்த்து ''ஒரு மனிதனாக வாறதுக்குப்பார்; அதுக்காகப்படி'' என்று சொல்லுகிறா. அம்மாவை அன்றைக்குக் கேட்டன், ''ஏனம்மா என்னைப் பார்க்க மனுசனாகத் தெரியவில்லையோ? என்று. அவசொன்னா, ''உடம்பு வளர்ந்தால் மட்டும் மனுசன் என்று அர்த்தமில்லை, 'மனிதனாக வாறத்துக்குப் பார்'' என்று வாத்திமார் சொல்லாதை அம்மா சொன்னது எனக்குப் புதினமாக இருக்குது.

அன்றைக்கு ஒருநாள் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு பேராசிரியர் எங்கடை பள்ளிக் கூடத்துக்கு வந்தார்; ஆசிரியர்களின் கூட்டத்திற் பேசினார்; எல்லாருக்கும் இருக்க வேண்டிய அடிப்படை அறிவைப்பற்றிப் பேசினார். அவருடைய பேச்சை நானும் கேட்டன்.

1. ஒருவன் தன் நாளாந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் சம்பந்தமான பிரச்சனைகளை விடுவிக்கவேண்டும்.
2. நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவுகளை பிரயோகித்துக், கடையிலே பொருள்களை வாங்கவும், விற்கவும் கூடியவனாக விருப்பதோடு கணக்குகளைப் பதிந்து வைக்கக் கூடியவனாகவும் இருக்க வேணும்.
3. காணிகளின் பரப்பளவுகளைக் கணித்து விற்க வாங்கக் கூடியவனாகவிருக்க வேணும்.
4. வங்கியில் கணக்குகளை வைக்கவும் வட்டிகளைக் கணக்கிடவும் கூடியவனாக இருக்க வேணும்.
5. விவசாய, தொழில் முயற்சிக்குத் தேவையான பொருள்களைக் கணிக்கவும் கொள்வனவு செய்யவும், உற்பத்தி விற்பனவு விலையினைத் தீர்மானித்துச் சந்தைப்படுத்தவும் கூடியவனாகவும் இருக்க வேணும்.
6. வீடுகட்டத் தேவையான பொருள்களையும் கூலிகளையும் கணக்கிடக் கூடியவனாக இருக்க வேணும்.
7. நாளாந்த வருமானத்தைத் திட்டமிட்டுச் செலவு செய்யவும். கணக்கு வைக்கவும் தெரிந்திருக்க வேணும்.
8. நேரகாலத்தை அறிந்து திட்டமிட்டுச் செயற்படக் கூடியவனாக இருக்க வேணும்.
9. பல்வேறு கணிதக் காட்டுருக்களை வரையவும் செய்யவும், விளங்கவும், விளக்கவும் கூடியவனாக இருக்க வேணும்.
10. திட்டப் படங்களையும், நிலக்கிடைப் படங்களையும் விளங்கவும், வரையவும் கூடியவனாக இருக்க வேணும்.
11. விஞ்ஞான ரீதியில் கணிதப் பிரச்சனைகளை விடுவிக்கும் அறிவுடையவனாக இருக்க வேணும்.

இவற்றைச் சரியான முறையில் மாணவர்களுக்குக் கற்பித்தால், இடைவிலகலை நிறுத்தலாம் என்று அவர் சொன்னார்.

அவருடைய கருத்தை எல்லா ஆசிரியர்களும் பாராட்டினார்கள், கைதட்டி வரவேற்றார்கள்; ஆனால் தொடர்ந்தும் தேவையில்லாத பழைய விஷயங்களைத்தான் எங்களுக்குப் படிப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேராசிரியரைப் போல, அம்மா இல்லாவிட்டாலும், கிட்டத்தட்ட அவர் சொன்ன விஷயங்களைத்தான் அம்மாவும் அடிக்கடி எனக்குச் சொல்லியிருக்கிறா. அதிகம் படிக்காத படியாலைதான்வாழ்க்கைக்குத் தேவையானவை எவை என்பதை அவவாலை சரியாகத் தெரிந்து

கொள்ள முடிந்ததோ என்றுகூட நான் நினைத்தேன்!

அம்மா சொல்லுறபடி ஒரு மனிசனாக வர நான் முடிவு செய்துபோட்டன். ஆனால் அம்மாவும் அந்தப் பேராசிரியரும் சொன்ன விஷயங்களை நான் ஆரிட்டைப் போய்ப் படிப்பது? இதுதான் இப்ப பிரச்சனை.

எனக்கு ஒரு வாத்தியார்-முக்கியமாக ஒரு கணக்கு வாத்தியார் தேவை. அவரிடம் நான் நிறையப் படிக்கவேணும். ஒரு மனிதனாகச் சமூக வாழ்வு வாழும்போது ஏற்படக்கூடிய கணக்குப் பிரச்சனைகளை விடுவிக்கக் கூடிய முறையில் அவரிடம் நிறையப் படிக்க வேணும். இவற்றைத் தெரிந்துகொண்டேன் என்றால், இவற்றிற்கான திறன்களைப் பெற்றுக் கொண்டேன் என்றால், பிறகு வாற பிரச்சினைகளை நானே படிச்சு விடுவித்துக்கொள்வேன் என்ற நம்பிக்கை என்னிடமுண்டு. பள்ளிக்கூடத்திலிருந்து இடை விலகுகிற மாணவர்களின் நிலையும் தேவையுங்கூட இதுதான்

ஆனால், வாத்தியாரைக் கண்டுபிடிக்கிறதுதான் கஷ்டமாக இருக்கிறது.

நான் தினமும் போய்வரும் வழியில் இருக்கிற பிள்ளையாருக்கு முன்னால், தோப்புக்கரணம் போட்டுக் கும்பிட்டு வருகிறேன். அவர் நல்ல ஒரு கணக்கு வாத்தியாரை என்னிடம் அனுப்புவார் என்று நம்பியிருக்கிறேன்; சிலவேளை, இப்ப இருக்கிற கணக்கு வாத்தியாருக்கு அவர் நல்ல புத்தியைக் கொடுத்தாலும் கொடுப்பார் எப்படியாவது நான் ஒரு மனிசனாக வரத்தான் வேணும். அம்மாவின் ஆசை மட்டுமல்ல, என்னுடைய ஆசையும் இதுதான்.

---

"பின்வாங்கில் உள்ள மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதே ஓர் ஆசிரியரின் பணியாகும்"

அமரர்
மு. கார்த்திகேசன்

---

## வட்டத்தின் பண்பு- கற்றுச் சுவைப்போம்.

*பொருத்தமான உபகரணங்களை உபயோகித்துக் கற்பித்தால், கசக்கும் கணிதம் மாணவக்கு கற்கண்டாக இனிக்கும். இலகுவிற் செய்யக் கூடிய உபகரணமொன்றை அறிமுகப்படுத்துகின்றார் கோப்பாயில் இயங்கும் யாழ். மாவட்டக் கணித விஞ்ஞானமூலவள நிலையத்தைச் சேர்ந்த இக்கட்டுரையாளர். இந்த உபகரணம் சம்பந்தமான மேலதிக விபரங்களை அறிவதில் ஆர்வமுடையோர் அவருடன் தொடர்பு கொள்ளலாம்.*

அருளீஸ்வரி வேதநாயகம்.

பாடசாலைவாழ்விலே பதினொரு ஆண்டுகள் கணிதபாடத்தைப் படித்து அடிப்படை அறிவைப் பெறாமலும் சாதாரண தரப் பரீட்சையில் S தரத்தையாவது பெறாமலும் அல்லலுறும் எழுபதுவீதமான மாணவர்களை நாம் காண்கின்றோம். எத்தனையோ மாணவர்கள் ஏனைய பாடங்களிற் சித்தியடைந்தும் கணிதபாடத்திற் சித்தியடையாமையால் தொடர்ந்து படிக்க முடியாமல் அவதிப்படுகின்றார்கள்; அவர்தம் பெற்றோர் வேதனைப்படுகின்றார்கள். கணித பாடத்தால் மட்டும் கண்ணீர் விடும் இந்தச்சமூகத்தினருக்கு நாம் உதவிசெய்ய வேண்டாமா? பாடசாலை மாணவர்கள் பலர்

(1) கணிதபாடம் கசப்பானது.

(2) கணித பாடநேரம் வகுப்பைவிட்டு வெளியேற வேண்டும்போல் இருக்கிறது.

(3) கணித ஆசிரியரைக்கண்டால் பயமாக இருக்கிறது.

(4) ஆசிரியர் முழுவதையும் கரும்பலகையில் எழுதி விடுகிறார். எமக்கு ஒன்றும் விளங்கவில்லை"
என்கிறார்கள்.

ஆனால் அவர்களது கணித ஆசிரியர்களோ,

(1) இந்த மாணவர்களுக்கு எவ்வளவுதான் கற்பித்தும் பயனில்லை.

(2) கற்பித்தவுடன் சில கணக்குகளைச் சரியாகச் செய்தாலும் பின்பு மறந்து விடுகிறார்கள்.

என்று வேதனையுடன் கூறுகிறார்கள். இந்த இருதரப் பினரதும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு.

பொதுவாக வகுப்பறைகளிலே கணிதபாட வேளைகளிற் பெருந்தொகையான மாணவர்கள் மிகவும் சோர்வுற்றநிலையில் எதுவித தொழிற்பாடுகளுமின்றிக் காணப்படுகின்றார்கள். சோர்வுற்ற மாணவர்களைத் தட்டிஎழுப்பி, கணிதம் கசப்பானதல்ல சுவையானதுதான் என்பதைத் தெளிவாக்கும் வகையிலே திட்டமிட்ட கற்பித்தற் செயற்பாட்டினை மேற்கொள்ளல் வேண்டும். இதற்குதவியாக நான் உருவாக்கிய சில தொழில் நுட்ப வடிவமைப்புக்களைக் கணித ஆசிரியர்களின் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்குமாக அவர்கள் முன்வைப்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


ஒரு மாணவன் எத்துறையிலே தொடர்ந்து படிக்கவிரும்பினாலும் அவனுக்குக் கேத்திர கணித அடிப்படை அறிவு அவசியமாகின்றது. எனவே சகல மாணவர்களும் கேத்திர கணிதத்தை விரும்பிக்கற்கும் வகையிலே "வட்டம்" என்னும் பகுதியிற் சகல அடிப்படை எண்ணக்கருக்களையும் விருத்தி செய்ய உதவும்கற்றல் - கற்பித்தல் உபகரணத்தொகுதி ஒன்றினை நோக்குவோம்.

இரண்டு அடி நீளமான சதுரவடிவப் பலகை ஒன்றினை எடுத்து, அதில் ஆணி நின்று அசையத்தக்கவாறு வட்டமொன்றினை பருதியின் வழியே தோண்டிடுக. படத்திற் காட்டப்பட்டவாறு மையத்தில் ஒரு துவாரமிடுக, இரண்டு ஆரைகளை பலகைத்துண்டில் வெட்டி எடுக்க. அளவு இடப்பட்ட நான்கு கான் தடிகளையும் அமைத்துக் கொள்க. 5 ஆணிகளையும் எடுத்து கொள்க.

இப்பொருள்களை ஏற்றவாறு பொருத்துவதன்மூலம் வட்டத்தின் சகல பண்புகளையும் வெவ்வேறுநிலைகளில் ஆசிரியரின் வழிகாட்டலுடன் மாணவர்கள் விளையாட்டாகக்கற்க முடியும்.

உதாரணமாக ஒரு வட்டத்தின் வில்லானது மையத்தில் எதிரமைக்கும் கோணத்திற்கும், பருதியில் எதிரமைக்கும் கோணத்திற்கும் இடையேயான தொடர்பை அறிவதற்காகப் பொருத்தப்பட்ட உபகரணத்தைப் படத்திலே அவதானிக்குக.






A. B. C ஐ அசைப்பதன் ரமைக்கும் கோணத்தையும்
மூலம் ஒவ்வொரு நிலையிலும் பாகைமானியில் வாசித்து அட்ட
மையத்தில் எதிரமைக்கும் வணையை நிரப்புக.
கோணத்தையும் பருதியில் எதி

| நிலை | மையத்தில் எதிரமைக்கும் கோணம் | பருதியில் எதிரமைக்கும் கோணம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

பதிவுகளை அவதானிப்பதன் மூலம், ஒரு வில், வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கும் கோணம், பருதியில் எதிரமைக்கும் கோணத்தின் இருமடங்காகும் என்பதை மாணவன் தானாகவே அறிந்துகொள்வான்.

தேவைக்கேற்றவாறு உபகரணத்தைப் பொருத்துவதன் மூலம், வட்டத்தின் ஒவ்வொரு டண்டையும் வெவ்வேறு நிலையுடன் ஈடுபடுவர்.

களில் அவதானித்து, மாணவன் தானாகவே முடிபுகளை அறிந்து மகிழமுடியும்.

தாமாகக் கண்டறிந்த முடிபுகளை, மாணவர்கள் இலகுவில் மறக்கமாட்டார்கள்; விடயத்திலே தெளிவுடையவர்களாக இருப்பார்கள்; தொழிற்பாட்டுடன் கற்பதால், எல்லா மாணவர்களும் அதில் மிகுந்த ஆர்வ

---

# ஒவ்வொரு நாளும் ஆசிரியர் நாளே.

ஆசிரியர் தினத்தில் மாணவர்கள், தம் ஆசிரியர்களுக்குப் பூமாலை சூட்டினர்; அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர். குறிப்பிட்ட ஒரு நாளில் மட்டும் இப்படிச் செய்தாற் போதுமா? என்றென்றும் மாணவர்கள் நினைத்துப் போற்றக்கூடிய வகையில், ஆசிரியர்கள் தம் கல்விப் பணியை ஆற்றவேண்டும்; பாடங்களை நன்கு ஆயத்தஞ்செய்து, மாணவர்க்கு அலுப்பு ஏற்படாதவாறு சுவையான முறையிற் கற்பிக்க வேண்டும்; அறிவை யூட்டுவதுடன் நின்றுவிடாமல், நல்ல பண்புகளையும் மாணவருள்ளத்திற் பதிய வைக்க வேண்டும். மாணவர்க்கு முன்மாதிரியாக, ஒழுக்க சீலர்களாக வாழவும் வேண்டும்.

கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம்
கந்தரோடை, தமிழ்க் கந்தையா
வித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவில்

---

# கல்விப் புனரமைப்பு

கல்வி நிர்வாகத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்பிரிவும் ஒவ்வொரு கல்விப் பிரதேசம் ஆகின்றது, கடந்த அக்டோபர் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ள கல்விப்புனரமைப்பின் நோக்கங்கள், செயற்பாடுகள் பற்றி விளக்கந் தருகின்றார். "கல்விக் கதிர்" குழுவைச் சேர்ந்த இவ்வெழுத்தாளர்.

சு. சுபத்திரா

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள கல்விப் பிரதேசம் ஒரு உதவி அரசாங்க பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தைக் குறிப்பிடும். யாழ் மாவட்டம் இவ்வாறான 14 கல்விப் பிரதேசங்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரதேசரீதியிலான இக் கல்விப்புனரமைப்பு கடந்த அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

**முக்கிய குறிக்கோள்கள்:-**

கல்வி இலக்குகளுக்கமைவாகக் கல்விப் பெறுபேற்றை உயர்த்தும் நோக்கில், கல்விச்சேவைகளை விஸ்தரித்தலும், செறிவான மேற்பார்வை, கண்காணிப்பினூடாகப் பாடசாலை அமைப்பின் வினைத்திறனை அதிகரித்தலுமாகும்.

**கல்வி அமைப்பின் பிரதான பிரிவுகள்:-**

தேசிய நிலை, மாகாண நிலை, வலய நிலை, பிரதேச நிலை, பாடசாலை நிலை என வகுக்கப்பட்டுள்ளது. எல்லா நிலைகளிலும் பொருத்தமான இணைப்புக்கள் மூலம் நிருவாகம் பரவலாக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின்மூலம் இது வரை இருந்த மாவட்டக்கல்வி நிருவாக முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**மாகாணக் கல்வி அமைச்சு:**

மாகாணக் கல்வி அமைச்சு கல்விச் செயலாளரால் தலைமை தாங்கப்படும். அவர் தேசிய கல்விக் கொள்கைகளுக்கும், மாகாணசபையின் கல்விக் கொள்கை வழிகாட்டலுக்கும் அமைய மாகாணக் கல்விப்ணிப்பாளருக்கு விளக்கங்களை அறிவிப்பவராகவிருப்பார். பொதுவான கல்விக் கொள்கை நிர்வாகம், நிறுவனவிடயங்கள், கல்வி அபிவிருத்தி, நிதி, கண்காணிப்பு ஆகிய தொழிற்பாடுகளைக் கொண்டதாக அமைச்சு இருக்கும்.

**மாகாணக் கல்வித் திணைக்களம்:-**

மாகாணக் கல்வித்திணைக்கள மாகாணக்கல்விப்பணிப்பாள

ராற் தலைமை தாங்கப்படும். அவர் இரு சிரேஷ்ட மேலதிக கல்விப்பணிப்பாளரின் உதவியைப் பெற்று; மாகாணக்கல்வித் திட்டமிடல், அமுலாக்கம், முகாமைத்துவம், ஆற்றுப்படுத்தல் முதலிய கல்வி நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவிருப்பார். இவர்கள் இ.க.நி. சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராக விருப்பர்.

### வலய அலகு:-

யாழ். மாவட்டத்திலுள்ள பதினான்கு கல்விப் பிரதேசங்களுக்கும் விசேட கல்விக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் சேவை, முதன்மை ஆசிரியர் சேவை போன்றவற்றைத் தனித் தனியாகப் பெற்றுக் கொடுத்தல், பொருளாதாரரீதியிலும், தேவை அடிப்படையிலும் சாத்தியமாகாதபடியால் சில பிரதேச அலுவலகங்களை உள்ளடக்கிய இடப்பரப்பு ஒரு வலயமாகக் கொள்ளப்படும். இவ் வலயம்2அல்லது3 யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், அம்பாறை தவிர ஏனைய மாவட்டங்கள் தனித் தனிவலயங்களாகவே கொள்ளப்படுகின்றன. இவ் வலயமொன்று ஒரு வலயக் கல்விப்பணிப்பாளரால் தலைமை தாங்கப்படும். இவர் இ. க. நி சேவை வகுப்பு 1 அலுவலராக விருப்பார். இவர் பாட நிபுணத்துவம் பெற்ற க.நி.சே. வகுப்பு ii),iii உத்தியோகத்தர்களினதும், ஏனைய உத்தியோகத்தர்களினதும் உதவியுடன் கல்வி நிகழ்ச்சித் திட்டமிடல், அமுலாக்கத்தை மேற்பார்வை செய்தல், கண்காணித்தல், இயைபுபடுத்தல், புள்ளியியல், தகவல்களைச் சேகரித்து மா.க. பணிப்பாளருக்கு வழங்குதல், கல்வி அபிவிருத்தி, பயிற்சிகள், பரீட்சைகளும் சோதனைகளும், துணைப் பாடவிதான நடவடிக்கைகள், பாடசாலை ஒழுங்கமைப்பு, முறைசாராக்கல்வி, எழுத்தறிவு முதியோர் கல்வி, விசேட கல்வி, தனியார் பாடசாலைகள், விழாக்கள், மாநாடுகள், மதிப்பீடு போன்ற பல்வேறு கடமைக் கூறுகளுக்கு வலய நிலையிற் பொறுப்பாக இருப்பார்.

இவர் மாகாணக் கல்வித் திணைக்களம்- பிரதேசக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகளுக்கிடையில் (கொழுவாக) தொடர்புடையவராகவிருப்பார். இவ் வலயப்பணிப்பாளர் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஒரு அங்கமாகவேயிருப்பார்.

### பிரதேசக் கல்வி அலுவலகங்கள்:-

பி.க. அலுவலகம் பிரதிக் கல்விப்பணிப்பாளரால் தலைமை தாங்கப்படும். இவருக்கு உதவியாக ஆகக்குறைந்தது இ.க. நிர்வாக சேவை வகுப்பு 111 உத்தியோகத்தர் இருவர் இருப்பர். இவ்வெண்ணிக்கை பாடசாலை மாணவர் எண்ணிக்கைக்கு அமைவாக அதிகரிக்கப்பட முடியும். பிரதேசக் கல்வி அலுவல



கம் பொதுவாகப் பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகளின் சகல கல்வி நிகழ்ச்சிகளின் அமுலாக்கத்துக்கும், பொது நிருவாகத்துக்கும் பொறுப்புடையதாகும். குறிப்பாக, பிரதேச மட்டத்திலான கல்வித்திட்டமிடல், பொது நிருவாகம், கல்வி முகாமிப்பு, ஒழுங்கமைப்பு விடயங்கள், பௌதிக வளங்கள், கற்பித்தற் பொருள்கள், கல்விச் சேவைகள், கல்வி அபிவிருத்தி, பாடசாலை மேற்பார்வையும் மதிப்பீடும், பரீட்சைகளும் மதிப்பீடுகளும், துணைப்பாடவிதான, மேலதிக பாடவிதான செயற்பாடுகள், விழாக்கள், முறைசாராக்கல்வி, எழுத்தறிவு-முதியோர் கல்வி, விசேடக் கல்வி, பள்ளி முன் கல்வி, தனியார் பாடசாலைகள், நிதி, இசைவுப்படுத்தலும் இணைப்புக்களும் ஆகிய விடயங்களிற் செயற்பாடுகளைக் கொண்டிருக்கும்.

பி.க. பணிப்பாளர் பிரதேச மட்டத்திலான ஆசிரியர் ஏனைய வள அணியினரின் இடமாற்றங்கள் உட்பட்ட, பொது நிருவாக வேலைகளுக்குப் பொறுப்பாகவிருப்பார். எனினும் கல்விப் பிரதேசங்களுக்கிடையிலான இடமாற்றம் மாகாணக் கல்விப்பணிப்பாளராலேயே மேற்கொள்ளப்படும்.

### பிரதேச செயலகம்:-

பிரதேச செயலகமானது: பிரதேச செயலாளரால் தலைமை தாங்கப்படும். இவர் தனது பிரதேசத்தின் சகல செயற்பாடுகளையும் கண்காணிக்கவும், இயைபுபடுத்தவும் பொறுப்புடையவர் ஆவார். கல்வியும் இச் செயற்பாடுகளில் ஒன்றாகும். பிரதேச செயலகத்தின் இசைபுபடுத்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு பிரதேச கல்வி அலுவலகம் உதவி செய்யும், அதே வேளையில் பிரதேசக் கல்வி அலுவலகம் பிரதேச செயலகத்துக்கு இணையாகத் தனது கல்விசார் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்.

பிரதேச செயலகம் பி. கல்வி அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுப்பதோடு, பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து கல்விக்கான ஒதுக்கீடுகளை பி.க பிரதிக்கல்விப் பணிப்பாளருடனும், ஏனைய திட்டமிடல் குழுவினருடனும் சேர்ந்து பங்கீடுசெய்து வழங்குவதோடு முறையான நிதிப் பயன்பாட்டையும், முன்னேற்றத்தையும் கண்காணிக்கும், அத்துடன் கல்விச் சேவைகளை வழங்குதல், இலவச மதிய உணவு, இலவச பாடநூல், சீருடைத்துணி வழங்கலின்போது பிரதேச கல்விப்பாளருக்கு உதவிகளையும் செய்யும்.

### கல்விப்புனரமைப்புத் திட்டத்தின் பயனாக முதன்மை பெறும் அம்சங்கள்:-

1. வலயக்கல்விப்பணிப்பாளரும் அவரது குழுவினரும் பொதுநிருவாக வேலைக

ளிருந்து விடுபட்டு: முக்கியமாகக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளிலேயே அதிக கவனம் செலுத்துவார்கள்.

2. சராசரி 30-35 பாடசாலைகளுக்கு ஒரு பிரதேசக் கல்வி அலுவலகம் அமைவதால் நிருவாகம் பாடசாலைக்கு அண்மித்ததாக வருவதோடு, பாடசாலை மேற்பார்வை, கண்காணிப்பு, நடவடிக்கைகள் துரிதமாக்கப்படுவதனால் பாடசாலை அமைப்பின் வினைத்திறன் அதிகரிக்கும். பிரதேசக்கல்வி அலுவலகங்களில் பொது நிருவாகத்துக்கெனத் தனியான உ.க. பணிப்பாளர் ஒருவரின் சேவை அமுல்படுத்தப்படுவதால்: பிரதேசக் கல்விப்பணிப்பாளர்கள் கல்வி அபிவிருத்தி, மேற்பார்வை, கண்காணிப்பு வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்த முடியும். இதனால் கல்விப் பெறுபேற்றை உயர்த்தலாம்.

3. பிரதேச மட்டத்திலான உள்ளக இடமாற்றங்கள் பி.க. பணிப்பாளராலேயே மேற்கொள்ளப்படும்.

4. பிரதேச கல்வி அலுவலகம் ஆசிரியர்ஓய்வூதியம் பெறுதல், ஏனைய பிரச்சனைகளை விடுவித்தலுக்கு ஆசிரியர் அதிபர்களுக்கு மிக அண்மையாக அமைகிறது.

5. உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிற் பிரதேச செயலகங்கள் அமைந்துள்ளதால் அவற்றினது முழுமையான சேவையைப் பிரதேசக் கல்வி அலுவலகங்கள் பெறவாய்ப்புண்டு.

6. பிரதேசக் கல்வி அலுவலகங்கள் மாகாண கல்விப் பணிப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகளைக் கொள்வதன் மூலம் தமது பிரச்சனைகளை நேரடியாகவே விடுவிக்கக் கூடியதாகவிருக்கும். ஏனைய வளங்களையும் பெறுதல் விரைவில் சாத்தியமாகும்,

**பிரதிகூலங்கள்:-**

இன்றைய சூழ்நிலையில் மாகாணக் கல்வித்திணைக்களம் வெகு தொலைவில் (திருகோணமலையில்) உள்ளதாலும் தொடர்புகள் மிகக் காலதாமதமாவதாலும் காரியங்களும் தாமதமாகவே நடைபெறலாம்.

மாகாணக்கல்வித்திணைக்களத்தின் வேலைப்பழு அதிகரிக்கும். அதேவேளையில் அதிகாரங்கள் மீளவும் மையப்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம்.

மேற்படி சிக்கல்களை இங்குள்ள புதிய கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள். மாகாணக்கல்விப்பணிப்பாளருடன் கலந்துரையாடிப்பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதன் மூலம் தீர்வு காண வேண்டும்.

○

# நீங்களும் நாங்களும்

**வணக்கம்:**

"விளக்கு"- முதற் சுடரைப் பலர் பாராட்டியுள்ளனர். "ஆசிரியர், மாணவர் மட்டுமல்லாமற் பெற்றோரும், கல்வியில் அக்கறை கொண்டோரும் பயன் பெறும் வகையிற் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தலையங்கம் அடக்கமாக, ஆனால் ஆழமாக அமைந்துள்ளது. "மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உடைத்துப் பாயும்" என்ற சொற்றொடர்கள் நினைவுக்கு வந்தன" என எழுதுகின்றார் "மில்க்வைற் நிறுவன உரிமையாளர் கலாநிதி க. கனகராசா. "இதழின் அமைப்பு. கவர்ச்சியாக இருக்கின்றது. அலுப்பின்றி வாசிக்கக்கூடிய முறையிற் கட்டுரைகள் அமைந்துள்ளன. எமது மக்களின் கல்வி உயர்ச்சிக்குக் காரணமாயிருந்த எத்தனையோ ஆசிரியர்களை நமது சமூதாயம் மறந்து விட்டது. அந்த ஆசிரியர்களைப் பற்றி எழுதுங்கள். இப்போதைய ஆசிரியர்களுட் சிலரையாவது நல்ல எழுத்தாளர்களாக ஆக்குங்கள்" என்கின்றார் செங்கை ஆழியான். "நாள்கள், நாலு பக்கம் போன்றவை பலருக்கும் பயன் தரக்கூடியவை. சொற்களின் சரியான உருவம், கருத்து சம்பந்தமாகத் தொடர்ந்து எழுதுங்கள்" எனக் கேட்கின்றார் புலவர் ம. பார்வதிநாதசிவம். யாழ்ப்பாணத்திலுள்ள ஆறு கல்விக் கோட்டங்களில் இடம் பெற்ற "விளக்கு" அறிமுக நிகழ்ச்சிகளிற் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் சாராம்சத்தைப் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். "விளக்கு" இதனை வெளியிடத் தொடங்கியதன் நோக்கத்தை அனைவருமே சரியாக இனங்கண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. பாராட்டுரைகள் உற்சாகத்தைத் தருகின்றன.

ஆசிரியர்கள் தம்மை அறிந்து கொள்ள வேண்டும், தம் மாணவர்களை அறிந்துகொள்ள வேண்டும், தம்பாடப்புலத்தை அறிந்து கொள்ளவேண்டும், மாணவர்க்குச் சலிப்பை ஏற்படுத்தாமற் கவர்ச்சியான முறையிற் கல்வியூட்ட வேண்டும், நல்ல பழக்க வழக்கங்களை, பண்புகளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல், அவர்களின் உள்ளங்களிற் பதிக்க வேண்டும் : நல்ல வாழ்க்கைக்கு அவர்களைத் தயாராக்க வேண்டும். இத்தகைய பணிகளைச் செய்யும் ஆற்றலே

ஆசிரிய வாண்மை எனப்படுகின்றது. இந்த வாண்மையை விருத்தி செய்வது நமது நோக்கங்களுள் ஒன்று.

கல்வி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது; அனைவரின் அக்கறைக்கும் உரியது. கல்வி பற்றிய தெளிவான கருத்துக்களைச் சுவையான முறையில் எடுத்துச் சொல்லவும் ''விளக்கு' விரும்புகின்றது.

இவற்றை மனத்திலிருத்தி உங்கள் ஆக்கங்களை ஆலோசனைகளை, அனுபவங்களை எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்

## யப்பான் நாட்டு ஆசிரியர்.

யப்பானிய மக்கள், கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அனைவரும் கல்வியறிவுபெறவேண்டியது கட்டாயமானது. வகுப்புக்கள் தொடங்குவதற்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாக ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்; தனித்தும் ஒன்று சேர்ந்தும் அன்றைய வேலைகளைத் திட்டமிடுகின்றனர்; கற்பித்தலுக்கு உதவக்கூடிய உபகரணங்கள் போன்றவற்றை ஒழுங்காக்குகின்றனர். மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர், ஆசிரியர்கள் தொடர்ந்து அங்கேயே நின்று அன்றைய வேலைகளை மதிப்பீடு செய்துவிட்டே வீட்டிற்குத் திரும்புகின்றனர்.

**மனோன்மணி சண்முகதாஸ்**
*வைத்தீஸ்வராக் கல்லூரித் தமிழ் விழாவில்.*

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வாண்மை விருத்திக் குழுவினரால் யாழ்- மகேந்திராவீதி, தாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது, ஆசிரியர்: சி. சிவசரவணபவன்; துணை ஆசிரியர்: க. வை. தனேஸ்வரன். நவம்பர் 1993.

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரை
சகல பாட நூல்களுக்கும்

மற்றும் உங்களுக்கு தேவையான
உயர்கல்விக்கான நூல்கள்

அனைத்தும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை

4, ஆஸ்பத்திரி வீதி,
255, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## 'விளக்கு'

இரண்டாவது சுடர் ஒளிர

**வாழ்த்துகின்றோம்!**

**தாசன் அச்சகம்**

**மகேந்திரா வீதி,**

**யாழ்ப்பாணம்.**